விலை ரூபா: 7.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு | தொலைபேசி - 2223378 | ஒலி 280

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | புரட்டாதி 08 | வெள்ளிக்கிழமை | (24.09.2004)

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிறந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## மட்டு – பொலநறுவை எல்லையில் புலிகள் அதிரடி

# கருணாவின் சகோதரர் ரெஜி உட்பட மூவர் தாக்குதலில் பலி

## மாதுரு ஓயா படைமுகாமருகே நேற்று முன்தினமிரவு சம்பவம்

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து நீக்கப்பட்ட கருணாவின் மூத்த சகோதரனும் கருணாவின் தாக்குதல் அணியினை வழிநடத்தி வந்தவருமான ரெஜி என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி சிவனேசதுரை உட்பட மூன்றுபேர் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.**

நேற்று முன்தினம் இரவு இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு பொலநறுவை மாவட்ட எல்லையில் உள்ள மாதுரு ஓயாவை அண்மித்த காட்டுப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போதே இவர்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட ஏனைய் இருவர் துமிலன் மற்றும் எழிலன் என தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து இதுவரை உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. தாக்குதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக பாதுகாப்புத் தரப்பினரால் ஊடகங்களுக்கு தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது. ரெஜி எனப்படும் விநாயகமூர்த்தி சிவ

(12 ஆம் பக்கம் பார்க்க)



## கருணாவின் சகா சுட்டுக் கொலை

(நமது நிருபர்)

பொலநறுவை மாவட்டம் மன்னம்பிட்டியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மன்னம்பிட்டியைச் சேர்ந்த குட்டி என அழைக்கப்படும் இராசதுரை சிவானந்தன் (வயது 24) என்ற இளைஞனே சுட்டுக்கொல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியின் மத்தியகுழு உறுப்பினர் வெள்ளவத்தையில் சுட்டுக் கொலை

### நேற்று மாலை சம்பவம்

(கொழும்பு)

ஈ.பி.டி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் வெள்ளவத்தையில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் மானிப்பாய் பிரதேசசபைத் தலைவருமான சோமசுந்தரம் வர்ணகுலசிங்கம் (வயது 39) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் இருந்து காரில் புறப்பட்டு விகாரை லேனில் உள்ள தனது வீட்டுக்குச் சென்று இறங்கிய சமயம் அவ் விடத்தில் நின்ற இனந்தெரியாத துப்பாக்கி நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டோர் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தின்போது அவ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவில் பொங்குதமிழ் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கனடாவின் ரொரென்ரோ நகரில் நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள கனேடியத் தூதுவராலயத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு ஆர்ப்பாட்டத்தினை தேசிய சங்க சம்மேளனமும், தேசிய பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

கனேடிய தமிழ் மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் ஹக்கீமுடன் பேசுவர்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இச் சந்திப்பு எதிர்வரும் 8 ஆம் திகதி பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது. வடக்கு - கிழக்கு பகுதிகளில் தமிழ் முஸ்லிம் மக்களின் உறவைப் பலப்படுத்துவது தொடர்பாக இச் சந்திப்பின் போது கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்பிற்கான ஏற்பாட்டை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இளம்பரிதி – சுனில் தென்னக்கோன் கண்காணிப்புகுழு அலுவலகத்தில் சந்திப்பு

(திருநெல்வேலி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினருக்கும் சிறிலங்கா இராணுவம் மற்றும் பொலிஸ் தரப்பினருக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று பிற்பகல் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்பு குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றன.

கண்காணிப்பு குழுவின் யாழ். மாவட்ட அதிகாரி அனித்தா ஸ்ரான் பேட் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி. இளம்பரிதி, மாணவர் அமைப்பு பொறுப்பாளர் எழிலன்பன் ஆகியோரும் படைத்தரப்பில் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், மாவட்ட கடற்படை கட்டளைத் துணைத்தளபதி கேணல் பிறேமரட்ண, கடற்படை கட்டளை அதிகாரி கேணல் ரணசிங்க ஆகியோரும் பொலிஸ் தரப்பில் யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தயா செனவிரட்னவும் கலந்து கொண்டுள்ளனர்.

இச் சந்திப்பின் போது குடாநாட்டு மக்கள் எதிர்கொள்ளும் இயல்பு வாழ்வுப் பிரச்சினை மற்றும் சட்ட ஒழுங்கை பேணுதல் உட்பட சமகால நிலைவரங்கள் குறித்து ஆராயப்பட்டது.

மேலும் குடாநாட்டில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மிடையில் தொடர்ந்தும் நல்லுறவைப் பேணுவது தொடர்பில் இருதரப்பும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

(மு-43)

### ஊர்காவல் படையினரை விடுவிக்கக்கோரும்

## திருமலை உண்ணாவிரதிகளுக்கு நிவாரணம் வழங்குகிறது அரசு

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இரு ஊர்காவல்படையினரின் குடும்பங்களுக்கு ரொக்கப்பணமும் உலர் உணவுப் பொருட்களும் அன்பளிப்பாக அரசு வழங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.எஸ். குணவர்த்தன நேற்று இவ் அன்பளிப்புக்களை ஊர்காவல் படையினரின் குடும்பத்திற்கு வழங்கினார்.

தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவு நிவாரணப் பொருட்களும் வழங்கப்பட்டன.

இதேவேளை விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள இரு ஊர்காவல் படையினரையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் எனக்கோரி கிழக்கு மாகாண சிங்கள அமைப்பை சேர்ந்தவர்களும் குறிப்பிட்ட ஊர்காவல் படை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக ஊழியர்களின் போராட்டத்திற்கு இணக்கத் தீர்வு

(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழக ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த வேலை நிறுத்த போராட்டத்திற்கு சாதகமான முடிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்றிரவு பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக் குழுவிற்கும் கிராமிய கைத்தொழில் அமைச்சர் லால் காந்த, கல்வி பிரதி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகியோருக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பின்போதே சாதகமான முடிவுகள் எட்டப்பட்டன. இதன்போது ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இன்று உயர்கல்வி அமைச்சின அதிகாரிகளும் தெழிற்சங்க கூட்டுக் குழுவும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

நேற்றைய சந்திப்பின் போது பின்வரும் விடயங்களில் இணக்கம் காணப்பட்டன.

தற்பொழுது கைவசமுள்ள 5மில்லியன் ரூபாவைப் பயன்படுத்தி அடிமட்ட ஊழியர்களுக்கு இடைக்கால படி வழங்கப்படும்.

புதிய சம்பளத் திட்டம் தொடர்பான அறிவித்தல் ஒக்டோபர் 31 திகதிக்கு முன் வெளியிடுதல்.

டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் சம்பள அதிகரிப்பு தொடர்பான அறிவித்தலை வெளியிடுதல்.

புதிய சம்பளத் திட்டத்தை அடுத்த வருடம் முதல் அமுல்படுத்தல் ஆகிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் பேச்சுவார்த்தையில் பங்கேற்காவிடினும் மீண்டும் யுத்தத்திற்கு செல்லமாட்டார்கள்

## ஜனாதிபதி நம்பிக்கை

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாது விட்டாலும் யுத்த மொன்றுக்கு செல்லமாட்டார்கள் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போது நிருபர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்த போதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது பற்றித் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் தாம் யுத்தத்தை விரும்பவில்லை என்றும் சமாதானத்தையே விரும்புவதாகவும் தெரிவித்து வருகின்றார்கள்.

இதனால் தான் இரண்டு வருடங்களுக்கு முன்னர் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நான் அழைப்பினை விடுத்திருந்தேன். ஆனால் விடுதலைப் புலிகள் சில நிபந்தனைகளை விதித்தமையினால் பேச்சுவார்த்தைகளை திட்டமிட்டபடி நடத்த முடியாதிருந்தது.

இதேவேளை, எமது ஆட்சியின் பின்னர் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியினரும் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துப் பேச்சுக்களை நடத்திவந்தார்கள்.

ஆனால், விடுதலைப் புலிகள் திடீரெனப் பேச்சுவார்த்தையில் இருந்து விலகிக்கொண்டார்கள்.

இது ஒரு புறமிருக்க தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபை குறித்த யோசனையை நான் ஆதரிக்கவில்லை. ஆனாலும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர இறுதித் தீர்வு ஒன்றை காண்பதற்கான பேச்சுக்களை ஆரம்பிக்க நான் ஆர்வமாக இருக்கின்றேன்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கையளித்துள்ள இடைக்கால நிர்வாக அலகு போன்ற மிகத் தரமான தீர்வுத் திட்டங்கள் பல வற்றை கடந்த காலத்தில் இலங்கை அரசு முன்வைத்திருந்தும், விடுதலைப் புலிகள் அவற்றை நிராகரித்து விட்டனர்.

இதேவேளை, ஒன்பது வருடங்களுக்கு முன்னர் நான் முன்வைத்த அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தைவிட வேறு சிறந்த இடைக்கால நிர்வாக அலகே இல்லை.

அப்படிப்பட்ட இடைக்கால நிர்வாக அலகை ஏற்காத புலிகளிடம், அவர்கள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகம் என்ற போர்வையில் நாட்டைக் கையளிக்க முடியாது.

எவ்வாறாயினும் அரசு பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற விடயத்தில் உறுதியாக இருக்கின்றது. இருப்பினும் நிரந்தர இறுதித் தீர்வு குறித்தே பேச்சுக்கள் அமைவதை நான் விரும்புகின்றேன் என்றார்.

இதற்கிடையில் நேற்று முன்தினம் ஐ.நா.சபையில் ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றியபோது, இலங்கையில் இனப்பிரச்சினை இருப்பதையும், தமிழினம் பாதிப்படைந்ததையும் ஒத்துக்கொண்ட ஜனாதிபதி, அதைச் சீர்செய்வதே தனது தர்போதைய பிரதான நோக்கம் என்றும் குறிப்பிட்டிருந்தார். இதனால் கொதிப்படைந்த சிங்களப் பேரினவாதிகள், பலத்த எதிர்ப்பைக் கிளப்ப ஆரம்பித்துள்ள நிலையில், வேறு வழியின்றி இந்த முரண்பட்ட கருத்தை முன்வைத்து இவ்விடயத்தைச் சமாளிக்க முயன்றுள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். (க)

## சமாதான தினத்தையொட்டி தமிழ் இணையத்தளம் திறப்பு

(கொழும்பு)
உலக சமாதான தினத்தையொட்டி அரச சமாதான செயலகம் தனது இணையத் தளத்தை தமிழ் மொழியில் ஆரம்பித்துள்ளதுடன், இது குறித்த நினைவு முத்திரை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை அரச சமாதான செயலகம் கொழும்பு நோட்டன் பீச்சிலுள்ள இலங்கை சர்வதேச தொடர்புகள் நிறுவனத்தில் நடாத்திய விசேட வைபவத்தின் போது ரூ. 4.50 பெறுமதியான முத்திரை வெளியிடப்பட்டதுடன் தமிழ் இணையத்தளமும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வில் துறைமுகங்கள் மற்றும் விமானசேவைகள் அமைச்சர் மங்களசமரவீர தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் டி.எம்.ஜயரத்ன ஆகியோர் உட்பட மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

## கருணாவுக்கு உதவியதை நிரூபித்தால் உடனடியாகப் பதவி விலகத் தயார்

### மட்டு - அம்பாறை இராணுவத் தளபதி அறிவிப்பு

(மட்டக்களப்பு)
விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு தான் உதவியதாக நிரூபிக்கப்பட்டால் உடனடியாகப் பதவி வலகத் தயாராக இருப்பதாக மட்டு - அம்பாறை இராணுவத் தளபதி வஜிர விஜேகுணவர்த்தன அறிவித்துள்ளார். விடுதலைப் புலிகளுக்கும், மட்டு-அம்பாறை இராணுவப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, கொழும்பு ஊடகவியலாளரிடம் கருத்துக் கூறியபோதே மட்டு-அம்பாறை இராணுவத் தளபதி வஜிர விஜேகுணவர்த்தன இவ்வாறு கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா இராணுவம் கருணா விற்கோ அல்லது பிரிந்து இயங்கும் எந்தவொரு குழுவுக்கோ எதுவித உதவிகளையும் பின்புலத்திலிருந்து செய்யவில்லை. அவ்வாறு நாம் உதவி செய்ததாக விடுதலைப் புலிகள் நிரூபிக்கும் பட்சத்தில், தனது சீருடைகளைக் கழற்றியெறிந்துவிட்டு பதவி விலகத் தயாராக இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

கடந்த காலத்தில் சந்திப்புக்கள் நடைபெறாமை குறித்துக் கேட்ட போது, ஸ்ரீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளைச் சந்திக்க எப்போதும் தயாராகவே இருந்தது. எனினும் விடுதலைப் புலிகள் பல வித சாட்டுக்களைக்கூறி சந்திப்புக்களைத் தவிர்த்து வந்ததாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்நிலையில் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் கருணாவின் குழுவிற்கும் தொடர்பு இருந்ததை இதுவரை விடுதலைப் புலிகள் நிரூபிக்காதது போன்று பிரிகேடியர் தற்போது கருத்துக் கூறியிருப்பது வேடிக்கையானது என்று தென்னிலங்கை ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது. (ற)

## பட்டதாரிகளுக்கான 2 ஆம் கட்ட பயிற்சி அடுத்த மாத நடுப்பகுதியில்

(கொழும்பு)
பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கான 2 ஆவது கட்டப் பயிற்சித் திட்டம் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதிநிதி அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டாவது கட்டப் பயிற்சித் திட்டத்தில் 24 ஆயிரம் பட்டதாரிகள் பயிற்சி பெறவுள்ளனர்.

முதலாவது கட்டப் பயிற்சி இம்மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட அமைச்சர் சியம்பலாப்பிட்டிய 17 ஆயிரம் பட்டதாரிகள் பயிற்சி பெற்று வருகின்றனர் எனப் பிரதிநிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-60)

## திலீபனைப் பாடுங்கள்



மலரும் பூக்களே - எங்கள்
மாவீரன் திலீபனைப் பாடுங்கள்
புலரும் கதிர்களே - எங்கள்
பிள்ளை திலீபனைப் பாடுங்கள்

வீசிடும் தென்றலே - எங்கள்
வேங்கை திலீபனைப் பாடுங்கள்
பீறிடும் அலைகளே - எங்கள்
புரட்சி திலீபனைப் பாடுங்கள்

ஆடிடும் சோலைகளே - எங்கள்
அரண் திலீபனைப் பாடுங்கள்
ஓடிடும் நதிகளே - எங்கள்
உரிமைத் திலீபனைப் பாடுங்கள்

சிரிக்கும் நிலவுகளே - எங்கள்
சிந்தனை திலீபனைப் பாடுங்கள்
துடிக்கும் தோள்களே - எங்கள்
தேசத் திலீபனைப் பாடுங்கள்

புலேந்தி திலீப்காந்த்

## புகைத்தலுக்குத் தடை சுற்றுநிருபம் வெளியீடு

(சுதுமலை)
சுகாதாரப் போசாக்கு நலன்புரி அமைச்சின் கீழ் உள்ள சுகாதார சேவைகள் அலுவலகங்கள், மாவட்ட, கிராமிய வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் கடமையுரியும் உத்தியோகத்தர்கள், ஊழியங்களை அலுவலக நேரங்களில் கடமையுரியும் அலுவலகங்களில் புகைத்தலை முற்றாகத் தடைசெய்யுமாறு கோரி சுகாதார அமைச்சினால் சகல சுகாதார நிலையங்களின் நிறுவனத் தலைவர்களிற்கும் சுற்றுநிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது சகல அலுவலகங்களிலும் புகைத்தலைத் தவிர்க்குமாறு கோரும் வாசகம் குறைந்தது இரு மொழியில் எழுதப்பட்டு அலுவலக வாசலில் தொங்கவிடப்படவேண்டும்.

அத்துடன், வைத்தியசாலைகள், மற்றும் அதனுடன் இணைந்த தேநீர், சிற்றுண்டிச்சாலைகளில் புகைத்தலுடன் தொடர்புடைய பொருட்கள் விற்பனை செய்யப்படுவதைத் தவிர்க்க வேண்டும். அத்துடன் அந்தச் சுழலில் இவ்வாறான பொருட்களை எவரும் விற்பனை செய்ய விடாது அவதானித்தல் வேண்டும். இவற்றை அவ்வவ் நிலையங்களுக்குப் பொறுப்பான தலைமை அதிகாரிகள் கண்காணித்தல் அவசியம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-252)

## இலங்கையின் உள்நாட்டு வர்த்தகத்தை இணைய்மயப்படுத்தும் திட்டத்திற்கு உலகவங்கி நிதியுதவி

(கொழும்பு)
முதன்முறையாக இலங்கையின் உள்நாட்டு வர்த்தகத் துறையை இணையமயப்படுத்தும் திட்டத்திற்கு உலக வங்கி 53 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்க முன்வந்துள்ளது.

இணைய வர்த்தக அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் சாதாரண உற்பத்தியாளர்களும் சந்தைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

தகவல் தொலைத்தொடர்பு, தொழில்நுட்பம் போன்றவை இந்த நிதி மூலம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

பொது மக்களுக்கான சேவைகளை வழங்குதல், தனியார் துறையினரின் போட்டித் தன்மையை அதிகரித்தல் புதிய திட்டங்களை அபிவிருத்தி செய்தல் உட்பட பல விடயங்களுக்காக இந்தச் செயல்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை, உள்நாட்டு வர்த்தகத் துறையை இணையமயப்படுத்தும் திட்டத்திற்கு உலக வங்கி நிதியுதவி வழங்க முன்வந்திருப்பது தமக்குப் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக உலகவங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் சமாதானத்தை வலுவடையச் செய்யலாம்.

தொழில்நுட்பம் மாத்திரமன்றி சகல துறைகளையும் அபிவிருத்தி செய்ய இந்த இணைய வர்த்தகம் உதவியாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## தீவிரவாதிகள் குண்டுத்தாக்குதல்! 2பேர் பலி

# இஸ்ரேலிய படைகள் பதில்தாக்குதல் 80 பேர் உயிரிழப்பு; 100 பேர் படுகாயம்

இஸ்ரேலியப் படையினர் காஸா எல்லைப் பகுதிகளிலுள்ள ஹமாஸ் தீவிரவாதிகளின் தங்குமிடங்கள் மீது நடத்திய தாக்குதல்களில் 80 பேர் கொல்லப்பட்டிருப்பதுடன், 100 பேர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலின் தலைநகர் ஜெருசலேமில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் இரு பொலிஸார் கொல்லப்பட்டுள்ளதுடன், 17 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஹமாஸ் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 18 வயதான பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரால், ஜெருசலேம் எல்லைப்புறத்தினை அண்மித்த பகுதியில் நடத்தப்பட்ட இக் குண்டுத்தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் இராணுவம், தெற்கு காஸாப் பகுதியில் விமானம் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.

தெற்கு காஸாவில் உள்ள கமாஸ் தீவிரவாதிகளின் முகாம்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இத்தாக்குதலில் 80 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பதிலுக்குத் தீவிரவாதிகளும் இஸ்ரேலியப் படைகள் மீது தாக்குதல்களை நடத்தியது.

இதில் இஸ்ரேலியப் படைகளுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தனையடுத்து காஸா எல்லைப் பகுதிகளில் இஸ்ரேலியத் துருப்புக்கள் பெருமளவில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது.

இத்தாக்குதல்களால் தெற்கு காஸாவில் உள்ள கரீண்டியோனிஸ் பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். (ப)



நியூயோர்க்கில் நடைபெற உள்ள ஐ.நா. பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷை சந்தித்துப் பேசினார்

# "ஏ.கே - 47" புகழ் காலஸ்னிகோவின் புதிய கண்டுபிடிப்பு லண்டனில் அறிமுகம்

புகழ்பெற்ற ஏ.கே. 47 ரக துப்பாக்கியை கண்டுபிடித்த மிகைல் காலஸ்னிகோவ் மனிதர்களை ஆட்டிப்படைக்கக்கூடிய மற்றொரு ஆயுதத்தை கண்டுபிடித்துள்ளார்.

துப்பாக்கி என்றாலே நினைவிற்கு வருவது ஏ.கே. 47 தான். இதை கண்டுபிடித்தவர் ரஷ்யாவின் மிகைல் காலஸ்னிகோவ் இரண்டாம் உலகப் போரின்போது ஜேர்மனி வீரரால் இவர் சுடப்பட்டார்.

அப்போது ஏற்பட்ட வெறியால் அதி நவீன துப்பாக்கியை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அதில் உருவானதுதான் ஏ.கே. 47. உலகத்தின் சிறிய, பெரிய நாடுகளின் ராணுவம் முதல் தீவிரவாதிகள் வரை ஏ.கே. 47 இல்லாத இடமில்லை. ஏ.கே 47 ஐ விட மனிதர்களை ஆட்டிப்படைக்கக் கூடிய பயங்கர ஆயுதத்தை காலஸ்னிகோவ் தற்போது கண்டுபிடித்துள்ளார்.

லண்டனில் நேற்று முன்தினம் அந்த ஆயுதம் விற்பனைக்கு அறிமுகம்செய்யப் பட்டது. புதிய கண்டுபிடிப்புபற்றி காலஸ்னிகோவ் அளித்த பேட்டியில்,

ஏ.கே. 47 கண்டுபிடிப்பின்மூலம் எனக்கு கிடைத்த நற்பெயரை தொடர்ந்து காப்பாற்ற விரும்புகிறேன். மேலும் பல நல்ல காரியங்களை செய்வதன்மூலம் எனது ஆயுதத்திற்கு கிடைத்த நற்பெயரை மேலும் விரிவுபடுத்த நினைக்கின்றேன். என்னுடைய நாட்டின் எல்லைகளைக் காக்கவேண்டும் என்ற தேசபக்தியில்தான் ஏ.கே. 47 கண்டுபிடித்தேன். ஆனால் கெரில்லாக்கள் முதல் தாதாக்கள்வரை எல்லோருடைய விருப்பமான ஆயுதமாக அது மாறிவிட்டது.

உலகம் முழுவதும் ஏ.கே. 47 பரவியது என்னுடைய தவறில்லை. அதனுடைய நம்பகத்தன்மை அப்படி. தற்போது என்னுடைய பெயரில் புதிய கண்டுபிடிப்பை அறிமுகம் செய்துள்ளேன். ரஷ்யாவில் விளைந்த தானியங்களையும், செயின்ட்பீட் டர்ஸ்பர்க்கில் உள்ள லடோகா ஏரியின் தண்ணீரையும் பயன்படுத்தி இது தயாரிக்கப்படுகிறது.

இதை நண்பர்களோடு சேர்ந்து அடித்தால் உற்சாகமாக இருக்கும் இவ்வாறு காலஸ்னிக்கோவ் கூறினார். அவர் கண்டுபிடித்துள்ள புதிய ஆயுதம் காலனிஸ்கோ வோட்கா ரஷ்யாவின் புகழ்பெற்ற மதுபானங்களில் ஒன்று. வோட்கா பிரிட்டன், ரஷ்யாவில் இதுவரை வந்த வோட்கா ரகங்கள் எல்லாவற்றையும் காலனிஸ்கோ வேட்கா தூக்கி சாப்பிட்டுவிடுமாம். (ப)




## பாகிஸ்தானுக்கு புஷ் நிதி உதவி

பாகிஸ்தானுக்கு 13,800 கோடி டொலர் நிதியுதவி வழங்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் உறுதியளித்துள்ளார்.

அடுத்த 5 ஆண்டுகளில் பாதுகாப்பு மற்றும் சமூகத்துறைகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுவதற்காகவே இந்நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

அத்துடன் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதக் குவிப்புக்கு எதிரான நடவடிக்கையைத் தொடரவேண்டும் என்று பாகிஸ்தானிடம் புஷ் வலியுறுத்தினார். (ப)

## ஈரானின் அணுவாயுத உற்பத்தியை அடக்குவதற்கு இஸ்ரேல் முயற்சி

ஈரான் மீது பொருளாதார தடைவிதிக்கப்படல்வேண்டும் என இஸ்ரேல் ஐக்கிய நாடுகள் சபையிடம் வலியுறுத்தியுள்ளது.

ஈரானில் இடம்பெற்றுவரும் அதிபயங்கர அணுவாயுத உற்பத்தி, ஐரோப்பிய நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருப்பதை சுட்டிக்காட்டியே இஸ்ரேல் இதனை ஐக்கியநாடுகள் சபையிடம் வலியுறுத்தியுள்ளது.

அபாயகரமான ஆயுத உற்பத்திகளைக் கைவிடுமாறு ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியம் ஈரானை வலியுறுத்தியபோதும், ஈரான் அதற்கு செவிசாய்க்காமல் தொடர்ந்து அணுவாயுத உற்பத்தியில் ஈடுபட்டுவருவதாகவும், இவ்வாயுதங்களைப் பயன்படுத்தி லண்டன், பரிஸ், பேர்ளின் போன்ற முக்கிய நகரங்கள் மீது திடீர் தாக்குதலை நடத்த ஈரான் திட்டமிட்டு வருவதாகவும் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப)

# குரங்கு என்று நினைத்து மனைவியை சுட்டார் கணவர்

(கோலாலம்பூர்)

குரங்கு என நினைத்து மரத்தின் மீதிருந்த மனைவியை துப்பாக்கியால் கணவர் சுட்டுக்கொன்றுள்ளார்.

மத்திய மலேசியாவில் பாஹங் மாநிலத்தினைச் சேர்ந்த மியாஹமித் (வயது 68). அவர் தனது வீட்டின் பின்புறமுள்ள மாமரத்தில் ஏறியிருந்து மாங்கொத்துக்களைப் பறித்துக்கொண்டிருந்தார்.

அப்போது அங்குவந்த மீயாவின் கணவர் மரத்தில் கிளைகள் அசைவதைக் கண்டு குரங்குகள் தான் மாமரத்தில் ஏறி அட்டகாசம் செய்கின்றன என நினைத்து வீட்டிலிருந்த வேட்டைத் துப்பாக்கியை எடுத்து வந்து மரத்திலிருந்த தன் மனைவியை குறிதவறாது சுட்டார். குண்டடிபட்டு மரத்திலிருந்து வீழ்ந்த தன் மனைவியை மருத்துவமனைக்கு கணவர் கொண்டுசெல்லும்போது வழியிலேயே உயிரிழந்தார். கணவர் அறியாது இக் காரியத்தை செய்திருந்தபோதும், மனைவியைக் கொலைசெய்ததாக அவரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்தத் தம்பதியருக்கு 13 குழந்தைகளும் 100 இற்கும் அதிகமான பேரக் குழந்தைகளும் 8 கொள்ளுப் பேரக்குழந்தைகளும் உள்ளனர் என்பதைக்கேட்டு மலேசியாவே வியந்துபோயுள்ளது. (ப)

# உலகம் சுற்றும் தம்பதியர்

லண்டனைச் சேர்ந்த தம்பதி டிம் நிக்கல்சன் (வயது 37), ஜோவன் பவுல்ட் (வயது 35) இருவரும் காரில் உலகத்தைச் சுற்றி வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு நிதி திரட்டுவதற்காக அவர்கள் இப் பயணத்தில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 3500 பவுண்ஸ் நிதி திரட்டியுள்ளனர்.


1954 இல் தயாரிக்கப்பட்ட பழைய மோரிஸ் ஒக்ஸ்போர்டு என்ற காரில் அவர்கள் பயணம் செய்துவருகின்றனர். கடந்த மே மாதம் 5ஆம் திகதி லண்டனில் பயணத்தைத் தொடங்கிய இத் தம்பதியினர், பிரான்ஸ், ஸ்பெயின், வட ஆபிரிக்க நாடுகளுக்கு பயணம் செய்துள்ளனர். இவர்கள் எகிப்திலிருந்து கப்பல்மூலம் இந்தியா வந்தனர். கப்பலில் காரையும் ஏற்றிவந்தனர்.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சுற்றிய இத் தம்பதியினர் குறிப்பாக கன்னியாகுமாரி, புதுவை, மகாவலிபுரம், சென்னை ஆகியவற்றிற்கு சென்று பின் தமது காருடன் கப்பலில் சிங்கப்பூர் செல்கின்றனர்.

பின்னர் தென்கிழக்கு நாடுகளில் சுற்றுப் பயணம் செய்கின்றனர். இந்தோனேஷியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளைச் சுற்றும் இத் தம்பதியினர், நியூஸிலாந்தில் பெப்ரவரி 2005 இல் பயணத்தை முடிக்கின்றனர்.

உலகத்தைச் சுற்றும் இத் தம்பதியினர் தங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை இப்பயணத்துக்காக விற்றுவிட்டதாகவும், சில பொருள்களை லண்டனில் கொன்ரயினரில் பாதுகாப்பாக வைத்துவிட்டு வந்துள்ளதாகவும் கூறுகின்றனர். (ப)

# பொருளாதார தடைகளை நீக்குமாறு புஷ் உத்தரவு



(வாஷிங்டன்)

லிபியா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குமாறு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து லிபியாவுடனான விமானப் போக்குவரத்து சேவைகள் மீது விதிக்கப்பட்ட் தடைநீக்கப்பட்டு அந்நாட்டுடன் நேரடி விமானப் போக்குவரத்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பேரழிவு ஆயுதத் திட்டங்கள் குறித்த சர்வதேச சமுதாயத்தின் கவலையைப் புரிந்துகொண்டு அதைப் போக்குவதற்கு கடந்த 9 மாதங்களில் லிபியா எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து பொருளாதாரத் தடையை நீக்கியுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஆதம் எரேலி தெரிவித்தார்.

அதேவேளையில், பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளின் பட்டியலில் லிபியா இன்னும் நீடிக்கிறது என்றும் அவர் கூறினார். (ப)




ஈராக் தலைநகர் பக்தாத்தின் மேற்குப் பகுதியில் தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒருவர் நேற்று நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டதுடன், 54 பேர் காயமடைந்தனர். இச் சம்பவத்தில் 13 வாகனங்கள் முற்றிலுமாகச் சேதமடைந்துவிட்டன. இதனையடுத்து அங்கு சென்ற மீட்புப் பணியாளர்கள் தீயணைப்பு பணியில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.


# ஐ.சி.சி.சம்பியன் கிண்ணப் போட்டி—2004
# அரையிறுதி ஆட்டம்



மகிழ்ச்சிப் பெரு வெள்ளத்தில்




ஹய்ண்ஸின் விக்கெற்றினை வீழ்த்திய மகிழ்ச்சியில் சொய்ப் அக்தர்.



ஓட்டம் ஒன்றினால் பெறும் சொய்ப் மாலிக், மற்றும் யஸீர் ஹமீட்.

## பாக்.அணியின் வெளியேற்றத்தை அடுத்து
## மேற்கிந்திய—இங்கிலாந்து அணிகள் இறுதிச்சுற்றில் மோதுகின்றன

லண்டனில நடைபெற்ற ஐ.சி.சி. சம்பியன் கிண்ண அரையிறுதிப் போட்டியில் நேற்று முன்தினம் ரோஸ் பவுல் மைதானத்தில் நடைபெற்ற மேற்கிந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியில் மேற்கிந்திய அணி 7 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் இன்ஸமாம்-உல்-ஹக் தமது அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தார். அதன்படி ஆரம்பத் துடுப்பாட்ட வீர்களாக யஸீஹமிட் மற்றும் சலமான்பட் இருவரும் களமிறங்கியபோதும் அணி ஒரு ஓட்டத்தினைப் பெற்றவேளை சல்மான் பட் பிராட்சோவின் பந்துவீச்சில சர்வனிடம் பிடி கொடுத்து ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய சொய்க் மாலிக யஸீ ஹமட்டுடன் இணைந்து 64 ஓட்டங்களைப் பகிர்ந்த போதிலும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் யஸீர்ஹமீர் 39 ஓட்டங்களுடன் ரன் அவுட்முறையில் ஆட்டமிழந்தார். அணி 71 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை சொய்ப் மாலிக்கையும், 100 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளையில் யூசுப் யுகானாவையும் இழந்தது.

அதன்பின்னர் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்துவீச்சாளர்களின் திறமையான பந்துவீச்சினால் 31ஓட்டங்களுக்குள் 6 விக்கெற்றினை இழந்தது.

இறுதியில் 38.2 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து பாகிஸ்தான் அணி 131 ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தான் அணி சார்பில் யஸீர் ஹமிட் 39 ஓட்டங்களையும், இன்ஸமாம்-உல்-ஹக் 21 ஓட்டங்களையும், சொய்ப்மாலிக் மறறும் சையீட் அப்ரிடி ஆகியோர் 17 ஓட்டங்களையும், யூசுப் யுகானா 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பநதுவீச்சில் மேற்கிந்திய அணி சார்பில் போல் கொலிமூர் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றினையும், பிராவோ 41 ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றினையும், வெவல் ஹய்ன்ஸ் 27 ஓட்டங்களையும் 2 விக்கெற்றினையும், பிரட்சோ மற்றும் கைய்ல் தலா ஒவ்வொரு விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

132 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற மிகச் சிறிய இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 28.1 ஓவர்களில் 3 விக்கெற்றினை இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது.

மேற்கிந்திய அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய கிறிஸ் கையில் ஒரு ஓட்டத்துடன் வெளியேறியதையடுத்து வெவல் ஹயின்ஸ் 5 ஓட்டங்களுடன் சொயிப்அக்தரின பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து வெளியேறினார். அப்போது அணியின ஓட்ட எண்ணிக்கை 20 ஆகும்

பின்பு 3ஆவது விக்கெற்றுக்காக சர்வனுடன் இணைந்த அணிததலைவர் லாரா 31 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் சொய்ப்அக்தர் வீசிய பந்தில் தலையில் அடிபட்டு தொடர்ந்து ஆடமுடியாத நிலையில் மைதானத்தை விட்டு வெளியேறினார்.

அடுத்துக் களமிறங்கிய சநதிரப்போல 11 ஓட்டங்களுடன் சொய்ட் மாலிக்கின் பந்துவீச்சில் சல்மான் படடிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதுவரை களத்தில் நின்று அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய சர்வன் இறுதிவரை ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் சொய்ப் அக்தர் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றினையும் சொய்ப் மாலிக் 15 ஓட்டங்களுக்கு 1 விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

(ப)



இன்சமாமின் விக்கெற்றினை வீழ்த்திய ஹெய்ன்ஸ் மகிழ்ச்சியில்.




ஆட்டமிழந்து வெல்லும் அவ்ரிடி



அக்தரின் பந்துவீச்சின்போது தலையில் பந்துபட்டு அவதியுறும் பிறையன் லாரா

## பொண்டிங் இல்லாத முதல் டெஸ்ட்போட்டி

இந்தியாவிற்கு எதிராக பெங்களூரில் எதிர்வரும் அக்டோபர் மாதம 6 ஆம் திகதி தொடங்கவுள்ள முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் விளையாடமாட்டார்.

ஐ.சி.சி. கிண்ண அரையிறுதியில் இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டியில் இரண்டாவது ஸ்லிப் பல் ஒன்றை பிடிக்க முயன்றபோது இடது கை கட்டை விரலில் காயம் ஏற பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

இதனால் முதல் டெஸ்டில் அவர் ஆடமாட்டார் என்று அவுஸ்திரேலிய அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. காயத்திலிருந்து மீண்டு இரண்டாவது டெஸ்டிற்கு தயாராவாரா எனபது பற்றித் திட்டவட்டமாகத் தெரியவில்லை.

## விளையாட்டுச் செய்திகள்

## சிம்பாப்வே சுற்றுலாவை பகிஷ்கரிக்கும் ஹார்மிசன்

இங்கிலாந்து கிரிக்கெற் அணியின் ஸிம்பாப்வே சுற்றுலாவை தாம் பகிஷகரிக்கப் போவதாக இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீவ் ஹார்மீசன் தெரிவித்துள்ளார்.

ஸிம்பாப்வே ஜனாதிபதி றொபட் முகாபேயின் வெள்ளையின எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக ஸிம்பாப்வேயில் போட்டிகளில் பங்கு பற்ற இங்கிலாந்து அணி மறுத்துவருகிறது.

பிரிட்டிஷ் அரசாங்கமும் சிம்பாப்வே சுற்றுலாவைத் தவிர்க்குமாறு கூறியது.

கடந்த உலகக்கிண்ணத் தொடரில் சிம்பாப்வேயில் நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து அணி பங்குபற்றவில்லை.

ஆனால், சிம்பாப்வே அணி உலகக்கிண்ணத் தொடருக்குப் பின் இரு தடவை இங்கிலாந்தில் போட்டிகளில் பங்குபற்றியுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் நவம்பர்மாதம் இங்கிலாந்து அணி சிம்பாப்வேக்கு சுற்றுலா மேற்கொளளத் திட்டமிடப்பட்டுள்ளது. இச்சுற்றுலாவை தாம் புறக்கணிக்கப் போவதாக ஸ்ரீவ் ஹார்மீசன் கூறியுள்ளார்.

உலகக்கிண்ணப் போட்டிகளின் போது இங்கிலாந்து அணி 4 நாட்கள் யோசித்துத் தீர்மானம் மேற்கொள்ளும் முன்பே சிம்பாப்வேக்குப் போவதில்லை என நான் தீர்மானித்துவிட்டேன். அப்போது இருந்ததைவிட தற்போது அங்கு மோசமான நிலை உள்ளது. அந் நாட்டின் முன்னணி வீரர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

சிலவேளை சிம்பாப்வே சுற்றுலாவைப் பகிஷ்கரிக்கும் ஒரே வீரர் நான் மட்டுமாக இருக்கலாம். ஏனையோரின் தீர்மானங்களுக்கு நான் மதிப்பளிக்கிறேன்.

சிம்பாப்வே சுற்றுலாவில் இடம் பெறாத வீரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று இங்கிலாந்து கிரிக்கெற் சபை அறிவிததுள்ளமை குறித்து மகிழச்சியடைகிறேன் என்றார் ஹார்மிசன்.

(ப)

## ஆண்டின் சிறந்த மெய்வல்லுநர்கள்

சர்வதேச மெய்வன்மைச் சம்மேளனங்களின் சங்கத்தின் ஐ.ஏ.ஏ.எவ் இவ்வருடத்திற்கான சிறந்த மெய்வல்லுநர் விருதை எதியோபபியாவின் கெனேனிஸா பெகேலே ரஷ்யாவின் யெலினா இஸின் பயோவா ஆகியோர் பெற்றுள்ளனா.

மொனோக்கோவில் நடைபெற்ற ஐ.ஏ.ஏ.எவ் கிராண்ட் ப்றீ மெய்வனமைப் போட்டிகளின் முடிவில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற வைபவமொன்றில் இவ்விருதுகள் வழங்கப்பட்டன.

ஆண்கள் பிரிவில் இவ்விருதை வென்ற கேனேனிஸா பெகேலே, எதெனஸ் ஒலிம்பிக் போட்டிகளில் 10,000மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தையும் 5,000மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும பெற்றவர். அதற்கு முன் சர்வதேச உள்ளக அரங்குப் போட்டிகளில் 5,000, 10,000 ஓட்டப்போட்டிகளில் அவர் புதிய உலக சாதனையுடன் தங்கப்பதக்கங்களை வென்றிருந்தார்.

கடந்த மூன்று வருடங்களிலும் இவ் விருதை மொரோக்கோவின் ஹிசாம் எல்குரோஜ் பெற்றிருந்தார். இவ்வருடம் தனது முதல் ஒலிம்பிக் தங்கப்பதக்கங்களையும் 5,000, 10,000ஓட்டங்களில் அவர் பெற்றுக்கொண்டார். சிறந்த வீரர் விருதுக்கான 5பேர் கொண்ட இறுதிப பட்டியலிலும் அவர் இடம் பெற்றிருந்தார். எனினும் 5பேர் கொண்ட விருதுத் தேர்வுக்குழு கெனேனிஸா பிகேலேவை சிறந்த வீரராகத் தெரிவுசெய்தது.

ஆனால், இவ்வருடத்தின் சிறந்த பெறுபேற்றுக்கான விருது (ஆண்கள் பிரிவில்) எல்குரோஜ்ஜுக்கு வழங்கப்பட்டது.


பெண்கள் பிரிவில் சிறநத வீராங்கனையாகத் தெரிவான ரஷ்யாவின் யெலினா இஸின் பயேவா, எதென்ஸ் ஒலிம்பிக்கில் கோலூன்றிப் பாய்தல் போடடியில் புதிய உலக சாதனையுடன் தங்கப்பதக்கத்தை வென்றார்.

அதன்பின் கடந்த 3ஆம் திகதி நடை பெறறபோட்டி யொன்றில மீண்டும் புதிய உலக சாதனை படைத்தார். கோலூன்றிப் பாய்தலில இவ் வருடம 8தடவை உலக சாதனைகள படைத்தவர் இவர்.

பெண்கள் பிரிவில் வருடத்தின் சிறந்த பெறுபேற்றுக்கான விருது பிரிட்டனின் கெல்லி ஹோமஸுக்கு வழங்கப்பட்டது. இவ் எதென்ஸ ஒலிம்பிக்கில் 800, 1,500மீற்றர் ஓட்டப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களைப பெற்றுக்கொண்டார்.

**இதுவரை ஐ.ஏ.ஏ.எவ்.இன் சிறந்த மெய்வல்லுநர் விருதை வென்றோர்**

| வருடம் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| 1988 | கார்ல்லூயிஸ்(அமெரிக்கா) | புளோரன்ஸ் ஜோய்னர் (அமெரிக்கா) |
| 1989 | ரோஜர் கிங்டம்(அமெரிக்கா) | அனாகியூரோட் (கியூ) |
| 1990 | ஸ்ரீவ்பெக்லே(பிரிட்டன்) | மேர்லின் ஒட்டே(ஜமைக்கா) |
| 1991 | கார்ல்லூயிஸ்(அமெரிக்கா) | கத்தரின்கிராப்(ஜேர்மனி) |
| 1992 | கெவின்யங்(அமெரிக்கா) | ஹேய்க்ஹென்கல்(ஜேர்மனி) |
| 1993 | கெலின்ஜாக்ஸன்(பிரிட்டன்) | சல்லிகன்னல்(பிரிட்டன்) |
| 1994 | நௌரூடீன் மோர்சேலி(அல்ஜீரியா) | ஜக்கியோய்னர்கீர்ஸ்(அமெரிக்கா) |
| 1995 | ஜொனதன் எட்வர்ட்ஸ்(பிரிட்டன்) | க்வென்டொரென்ஸ்(அமெரிக்கா) |
| 1996 | மைக்கல்ஜோன்ஸன்(அமெரிக்கா) | ஸ்வெட்லானாமாஸ்டர்கோவா(ரஷ்யா) |
| 1997 | வில்சன்கிப்கேட்டர்(டென்மார்க்) | மேரியன்ஜோன்ஸ் (அமெரிக்கா) |
| 1998 | ஹெய்ல்கெப்செலேசி(எதியோப்பியா) | மேரியன்ஜோன்ஸ்(அமெரிக்கா) |
| 1999 | மைக்கல் ஜோன்ஸன்(அமெரிக்கா) | கப்ரியெலாஸபோ(ருமேனியா) |
| 2000 | ஜான்ஸெலென்(செக்குடியரசு) | மேரியன்ஜோன்ஸ்(அமெரிக்கா) |
| 2001 | ஹிசாம்அல்குரோஜ்(மொரோக்கோ) | ஸ்டோசிட்ரஜிலா(அமெரிக்கா) |
| 2002 | ஹிசாம்அல்குரோஜ்(மொரோக்கோ) | பவுலாரட்கிளிவ்(பிரிட்டன்) |
| 2003 | ஹிசாம்அல்குரோஜ்(மொரோக்கோ) | ஹெஸ்ட்ரிகுளோயெட்(தெ.ஆபிரிக்கா) |
| 2004 | கெனேனிசாபெகேலே(எதியோப்பியா) | யெலினாஇஸின்பயேவா(ரஷ்யா) |




யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் கொமசியல் வங்கியின் அனுசரணையுடன் நடத்திய 14வயதுக் கீழ்ப்பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி சம்பியனானதும் கல்லூரி அதிபாரையும் அணி வீரர்களையும் படத்தில் காணலாம்.

# குடாநாட்டின் சிறந்த விவசாயிகளாக தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

இந்த ஆண்டில் விவசாயச் செய்கையில் சாதனை படைத்த விவசாயிகள 80பேர் யாழ்.மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 10.45 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மாநாதன், வடக்கு-கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் கலாநிதி சிஞானச்சந்திரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக, யாழ். ...ட்ட கால் நடை உற்பத்தி சுகாதாரத்துணைக்கள உதவிப்பணிப்பாளர் டாக்டர்.பொ.இராமநாதன், யாழ்மாவட்ட கமநலசேவை உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், யாழ.மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு விவசாயப் போதனாசியர் பிரிவில் இருந்தும் 6 சிறந்த விவசாயிகள் வீதமும், மாவட்ட ரீதியாக சிறந்த விவசாயிகள் வீதமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மொத்தமாக தெரிவு செய்யப்பட்ட 80 விவசாயிகளே கௌரவிக்கப்படவுள்ளனர். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளின் பெயர்விபரம் வருமாறு:-

## விவசாயப் போதனாசிரியர் பிரிவு

**புங்குடுதீவு**

நெற்செய்கை- வைத்திலிங்கம் முத்துலிங்கம் (2ஆம் வட்டாரம், புங்குடுதீவு),
மிளகாய்ச்செய்கை- மகேஸ்வரன் சத்தியேஸ்வரி (8ஆம் வட்டாரம், நயினாதீவு)
வீட்டுத்தோட்டச் செய்கை- தானியல் றெக்சியன் (3ஆம் வட்டாரம், புங்குடுதீவு)
நீர்முகாமைத்துவம் உள்ளடக்கிய செய்கை- நாகராசா திருச்செல்வம் (3ஆம் வட்டாரம், நயினாதீவு)
பெண் தலைமைத்துவ விவசாயச் செய்கை- நவரத்தினம் யோகராணி (8ஆம் வட்டாரம், நயினாதீவு)
வினைத்திறனான நிலப்பயன்பாட்டை உள்ளடக்கிய செய்கை- முருகேசு வள்ளிப்பிள்ளை (3ஆம் வட்டாரம், நயினாதீவு)

**வேலணை**

நெற்செய்கை- நல்லதம்பி மோகனராசா (சரவணை கிழக்கு, வேலணை)
மிளகாய்ச்செய்கை- குமரேசன் குமாரதேவன் (7ஆம் வட்டாரம், அனலைதீவு)
வீட்டுத்தோட்டச் செய்கை- ஐங்கரன் மகேஸ்வரி, (வேலணை மேற்கு, வேலணை)
நீர்முகாமைத்துவம் உள்ளடக்கிய செய்கை- சிவலிங்கம் தனபாலன் (நவாந்துறை வடக்கு, ஊர்காவற்றுறை)
பெண் தலைமைத்துவ விவசாயச்செய்கை - சுவாமிநாதன் உலகநாயகி (வேலணை மேற்கு, வேலணை)
வினைத்திறனான நிலப்பயன்பாட்டை உள்ளடக்கிய செய்கை- நல்லையா தேவானந்தன் (புளியங்கூடல் தெற்கு)

**நல்லூர்**

நெற்செய்கை - சந்தியாப்பிள்ளை ஜெகசோதிநாதன் (இராமநாதன் வீதி நாயன்மார்கட்டு)
மிளகாய்ச்செய்கை- பாலசிங்கம் பரமலிங்கம் (குமாரகோட்டம், கோண்டாவில்)
வீட்டுத்தோட்டச் செய்கை யோகேஸ்வரி தேசிங்கர்ராசா (3ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை)
நீர்முகாமைத்துவம் உள்ளடக்கிய செய்கை- கிறிஸ்தோத்திரம் அன்ரன் ஆனந்தநாதன் (கலாசாலை வீதி, திருநெல்வேலி)
பெண் தலைமைத்துவ விவசாயச் செய்கை தர்சினி ராமச்சந்திரன் (புங்கன்குள வீதி,கொழும்புத்துறை)
வினைத்திறனான நிலப்பயன்பாட்டை உள்ளடக்கிய செய்கை- கந்தையா யோகேஸ்வரன் (முனியப்பர் கோவிலடி, கோண்டாவில்)

**தொல்புரம்**

நெற்செய்கை- பெரியான் தேவராசா (விழிசுட்டி, சங்கானை)
மிளகாய்ச்செய்கை- இராசையா நகுலேஸ்வரன் (வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை)
வீட்டுத்தோட்டச் செய்கை- சிவப்பிரகாசம் முத்துலிங்கம் (மூளாய் மேற்கு, மூளாய்)
நீர்முகாமைத்துவம் உள்ளடக்கிய செய்கை- முத்துக்குமாரு தேவராசா (தொட்டிலடி, சங்கானை)
பெண் தலைமைத்துவ விவசாயச் செய்கை- தனலட்சுமி சிவக்குமார் (பலகாடு, காரைநகர்)
வினைத்திறனான நிலப்பயன்பாட்டை உள்ளடக்கிய செய்கை- வேலுப்பிள்ளை பத்மநாதன் (குளிப்பன், வட்டுக்கோட்டை)

**கிரிமலை**

நெற்செய்கை- சின்னப்பு முத்ததம்பி (நவாலி தெற்கு)
மிளகாய்ச்செய்கை செல்லத்துரை சற்குணம் (காஞ்சிபுரம், மாதகல்)
வீட்டுத்தோட்டச் செய்கை சிவநேசன் றஞ்சனா (அளவெட்டி தெற்கு, அளவெட்டி)
நீர்முகாமைத்துவம் உள்ளடக்கிய செய்கை சதாசிவம் செல்வரத்தினம் (கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு)
பெண் தலைமைத்துவ விவசாயச் செய்கை செல்லத்துரை செல்வறஞ்சிதம் (துர்க்காபுரம், தெல்லிப்பழை)
வினைத்திறனான நிலப்பயன்பாட்டை உள்ளடக்கிய செய்கை கணபதி முத்துலிங்கம் (கோணாவளை, வசாவிளான்)

**உடுவில்**

நெற்செய்கை - கன்கரட்ணம் மடுப்பிரசாந் (சங்குவேலி, மானிப்பாய்)
மிளகாய்ச்செய்கை வேலுப்பிள்ளை மகாதேவன் (புன்னாலைக்கட்டுவன் கிழக்கு)
வீட்டுத்தோட்டச்செய்கை வேலும் மயிலும் தவமலர் (ஏழாலை கிழக்கு, ஏழாலை)
நீர்முகாமைத்துவம் உள்ளடக்கிய செய்கை செல்லையா தயாபரன் (முருகன் இல்லம், இணுவில் தெற்கு)
பெண் தலைமைத்துவ விவசாயச் செய்கை- செல்லத்துரை ராஜேஸ்வரி (புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
வினைத்திறனான நிலப்பயன்பாட்டை உள்ளடக்கிய செய்கை - கனகரட்ணம் ரவிகுலநாதன் (வங்கி ஒழுங்கை, சுன்னாகம்தெற்கு)

**உரும்பிராய்**

நெற்செய்கை - சி.தவராசா (செம்மணி வீதி, இருபாலை தெற்கு)
மிளாய்ச்செய்கை - வ.சிவலிங்கராசா (கிருஸ்ணா கோவில் வீதி, கோப்பாய் வடக்கு)
வீட்டுத்தோட்டச் செய்கை க.சண்முகம் (மூன்று கோவிலடி, உரும்பிராய் மேற்கு)
நீர்முகாமைத்துவம் உள்ளடக்கிய செய்கை து.விக்னேஸ்வரன், (ஊரெழு கிழக்கு)
பெண் தலைமைத்துவ விவசாயச் செய்கை வி.தனலட்சுமி (கரந்தன், நீர்வேலி மேற்கு)
வினைத்திறனான நிலப்பயன்பாட்டை உள்ளடக்கியசெய்கை த.சிவலோகநாதன (உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்)

**புத்தூர்**

நெற்செய்கை த.காசிநாதர் (சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)
மிளகாய்ச் செய்கை மா.இரத்தினசிங்கம் (வாதரவத்தை)
வீட்டுத்தோட்டச் செய்கை அ.பத்மாவதி (புத்தூர் மேற்கு)
நீர்முகாமைத்துவம் உள்ளடக்கிய செய்கை பெ.பொன்னன். (புத்தூர் வடக்கு, புத்தூர்)
பெண் தலைமைத்துவ விவசாயச் செய்கை தி.கமலாதேவி (சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி)
வினைத்திறனான நிலப்பயன்பாட்டை உள்ளடக்கியசெய்கை வே.முருகுப்பிள்ளை (இடைக்காடு வடக்கு,அச்சுவேலி)

**கைதடி**

நெற்செய்கை - தில்லைநாதர் தங்கவேலு (நாவற்குழி கிழக்கு, கைதடி)
மிளகாய்ச்செய்கை முத்துக்குமாரசாமி தவேந்திரன் (கைதடிமேற்கு கைதடி)
வீட்டுத்தோட்டச்செய்கை கிட்டினன் சின்னம்மா (கைதடி கிழக்கு, கைதடி)
நீர்முகாமைத்துவம் உள்ளடக்கிய செய்கை கோபாலபிள்ளைகௌரிதாசன் (கைதடி வடக்கு கைதடி)
பெண் தலைமைத்துவ விவசாயச் செய்கை குணரத்தினம் சிவநாயகி (மட்டுவில், சந்திரபுரம்)
வினைத்திறனான நிலப்பயன்பாட்டை உள்ளடக்கிய செய்கை - ஆறுப்பிள்ளை சின்னத்துரை (சிவன்கோவிலடி, மட்டுவில் தெற்கு)

(தொடர்ச்சி ...)

# இலங்கை அமைதிப்படை ஹெயிட்டி பயணம்

(கொழும்பு)

சாவதேச அமைதிகாக்கும் படையில் இணைந்து கொள்வதறகாக இலங்கையின் முதலாவது அமைதிகாககும் படைப்பிரிவு நாளை சனிக்கிழமை ஹெயிட்டிக்குப் பயணமாகவுள்ளது.

இந்த அமைதிகாக்கும் படைப் பிரிவில் 44அதிகாரிகள் உட்பட 644படைவீரர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இது தொடர்பில் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் பிரியாவிடை வைபவம் ஒன்றும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. (ற-8)

# ஜனாதிபதியின் ஐ.நா.உரைக்கு அரசியல் கட்சிகள் கண்டனம்

ஜானாதிபதியின் ஐநா உரைக்கு பல்வேறு அரசியல் கட்சிகளும் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன. ஜனாதிபதியின் உரையை கடுமையாகக் கண்டித்துள்ள ஜாதிக ஹெல உறுமயக் கட்சி ஜனாதிபதியின் குழந்தைத்தனமான உரை விடுதலைப்புலிகளின் செயற்பாடு களை நியாயப்படுத்துவதற்கே உதவும் எனக் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஸ்ரீலங்காவில் இனப்பிரச்சினை இருப்பதை ஜனாதிபதி ஒத்துக்கொண்டிருப்பது மிகவும் முறைகேடானது. தனிப்பட்ட காரணங்களுக்காக சிலரை விடுதலைப் புலிகள் கொலை செய்தமை தவிர ஸ்ரீலங்காவில் எதுவித சம்பவங்களுமே நிகழாத நிலையில், எதைக காரணம்காட்டி ஜனாதிபதி இத்தகைய கருத்தை முன்வைத்தார் என்பது புரியாத புதிராக உள்ளது என்றும் ஹெல உறுமய கருத்துக் கூறியுள்ளது.

இதற்கிடையில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையின் மூலம் ஸ்ரீலங்கா அரசு மீண்டும் ஒரு யுத்தத்திற்கான முன்னெடுபபுகளை எடுத்து வருவதற்கான சந்தேகத்தை ஏற்படுத்தி வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் விசனம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரி மன்னிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இது குறித்து விசனம் வெளியிட்டார்.

ஜனாதிபதி இவ்வாறு முன்னுக்குப் பின் முரணான மாறுபட்ட கருத்துக்களை தவிர்த்து சமாதான முன்னெடுப்புக்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

எம்மீது மீண்டும் ஒரு யுத்தம் திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ள தாம் தயாராகவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-8)

# தென்கொரிய உயர் அதிகாரிகள் யாழ். தொ. நு. கல்லூரிக்கு விஜயம்

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியைத் தொழில் நுட்பவியல் நிறுவனமாகத் தரமுயர்த்தும் வேலைத் திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்காக நேற்று முன்தினம் 4 தென்கொரிய உயர் அதிகாரிகள் தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை தந்திருந்தனர்.

கொரியத் தூதுவர் லிம்யோகொங், இலங்கையின் தென்கொரிய வதிவிடப்பிரதிநிதி கிம்பைங்குவான், மற்றும் கொரிய நிபுணர்களான கை.சூலிரைகவோடோ மற்றும் சுங் கீலிம் (தூதுவரது துணைவியார்) ஆகியோரே தொழில்நுட்பக்கல்லூரிக்கு வருகைதந்திருந்தனர்.

தொழில்நுட்பக் கல்லூரியின் மைதானத்தில் பொறியியல் பீடத்திற்கான 10 புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கென






இலங்கை அரசாங்கம் 7.3மில்லியன் ரூபா நிதியை வழங்கியுள்ளது. அத்துடன் இப் பொறியியல் பீடத்திற்கென 2.38 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொறியியல் உபகரணங்களை தென கொரியா அரசாங்கம் வழங்க முன் வந்துள்ளது.

இவ் உபகரணங்களை விரைவாக வழங்குவதுடன் அவற்றை யாழ்.தொழில்நுட்பக்கல்லூரியில் பொருத்துவதற்கும், பயிற்சி வழங்குவதற்கும் விரைவில் தென்கொரியாவில் இருந்து 6அதிகாரிகள் யாழப்பாணத்திற்கு வருகைதரவுள்ளனர்.

தென்கொரிய தூதுவர் அங்கு கருத்து வெளியிடுகையில், தமிழ் கலாசாரத்தின்படி மங்கள இசை வாத்தியங்களுடன் மாலை அணிவித்து, பொன்னாடைபோர்த்து சந்தனமாலை அணிவித்து எங்களை உணர்ச்சிபூர்வமாக வரவேற்றதை நினைத்துத் தாம் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

இவ் ஏற்பாடுகளை செய்த யாழ்.தொழிலநுட்பக்கல்லூரி அதிபர் ந.யோகராஜன் மற்றும் கல்லூரி நிர்வாகத்தினருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டாா.

மேலும் தென்கொரிய அரசாங்கம் விரும்பியபடி யாழ்.தொழில்நுட்பக்கல்லூரியின் செயற்திட்டம் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும். யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி தென்கொரிய அரசாங்கத்தினால் நல்ல முறையில் புனரமைக்கப்படும். எமது அரசாங்கத்தால் வழங்கப்படும் உபகரணங்கள் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களது முன்னேற்றத்திற்கு நல்லமுறையில் பயன்படும்.

அத்துடன், இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நல்லதொரு புரிந்துணர்வு ஏற்பட்டு விரைவில் நாட்டில சமாதானம் ஏற்படும் என நான் நம்புகிறேன் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ற-195)

## கருத்தரங்கு

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டத்தினரால் நாளை சனிக்கிழமை காலை 9.30மணிக்கு இல.106 4ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் "பெண்கள் உரிமைகளில் புரிந்துகொண்டவையும் புரிந்து கொள்ள வேண்டியவையும்" எனும தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

எனவே இக்கருத்தரங்கில் பெண்கள் தொடர்பாக வேலை செய்வோர் மற்றும் பெண்கள் அபிவிருத்தியில் ஆர்வமுள்ளோருக்கும் மிகவும் பயனுள்ளதான இக் கருத்தரங்கில் சம்பந்தப்பட்டோரைப் பங்குபற்றி பயன பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற)

# அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றத் தகுதிபெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம் )

திருகோணமலையில் நடைபெற்ற வடக்கு-கிழக்கு மாகாண மட்ட தமிழ்த் தினப் போட்டிகளில் வெற்றிபெற்று அகில இலங்கை ரீதியான போட்டிகளில் பங்குபற்றத் தகுதிபெற்றோரின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து தகுதி பெற்றோரின் பெயர் விபரம் வருமாறு:

**வாசிப்பு**

பிரிவு-1 த.கோகுலன் - யா/கர வெட்டி மாணிக்கவாசகர் வித்தி.

பிரிவு-2 பொ.நிருபிதா-வவு. விபு லானந்தா மகாவித்தி.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

பிரிவு-1 யு.எல். மினித்புரத் - கல்முனைஇராமகிருஷ்ண மிஷன் வித்தி.

**ஆக்கம் எழுத்து**

பிரிவு 1- த. அபிநயா - யா. சாவ கசசேரிஆரம்பப்பாடசாலை

**கட்டுரை வரைதல் /கடிதம் வரைதல்**

பிரிவு-2எச்.இஸ்சத் சமீஹா - க.மு ஆயிஷா பெண்கள் மகா வித்தி

பிரிவு-3 பா.ஜசிந்தா - யா /வேம் படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

**கட்டுரை வரைதல் / கவிதை நயத்தல்**

பிரிவு -4 வா. தர்மிஷா- யா/ யூனியன் கல்லூரி.

**தமிழியற் கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்**

பிரிவு -5 த.சசிரேகா - மட/ மகா ஜனாக் கல்லூரி.

**இலக்கணப்போட்டி**

பிரிவு-4 ஆ.பா.பாத்திமா றிபானா - மட்/மீராபாலிகா மகாவித்தி.

பிரிவு-5 தி. காயத்திரி - யா/மகா ஜனாக்கல்லூரி.

**திறனாய்வுப் போட்டி**

பிரிவு-5வி. மயூரதாஸ் - யா/ புற் றளை மகாவித்தி.

**குறுநாடக ஆக்கம்**

பிரிவு-4 வே. சுபிதா - கிளி/ கல வெட்டித்திடல்நாகேஸ்வரா வித்தி.

பிரிவு-5 கு. அறிவழகன் யா/ மல்லாகம் மகா வித்தி.

**கவிதை ஆக்கம்**

பிரிவு-4 அ. அனுஷானி- யா/சுண டுக்குளி மகளிர் கல்லூரி.

பிரிவு 5 மு.றசீத்ஜுஸ்லா - மட்/ மீரா பாலிகா மகா வித்தி.

**சிறுகதை ஆக்கம்**

பிரிவு-4 மு.கேதுஜா - கல்/விபு லானந்தா மத்திய கல்லூரி.

பிரிவு -5 ரா.அருஸ் - திரு/கிண் ணியா மத்திய கல்லூரி.

**பேச்சு**

பிரிவு-1 கு. சிரஞ்சிதன் - வவு/ விபுலானந்த மகாவித்தி.

பிரிவு- 2 ரவீந்திரமூர்த்தி ஜனகன மட் /சிவானந்த வித்தி.

பிரிவு-3 பி. கேஷினி ஏஞ்சலா திரு/சென்மேரிஸ் கல்லூரி.

பிரிவு- 4 சி.அபிராமி - திரு/ சென் மேரிஸ் கல்லூரி.

பிரிவு-5 தெய்வேந்திரன் ஹர்சன- யா/மத்திய கல்லூரி.

**பாவோதல்**

பிரிவு -1 சூ. கோபிகிருஷ்ணா கிளி/தர்மபுரம் இல 1 அ.த.க பாட . சாலை.

பிரிவு -2 த. தர்ஷாந் திரு/புனித சூசையப்பர் கல்லூரி.

பிரிவு-3 சதுர்த்திகா சக்கரவாத்தி மட/வின்சன் மகளிர் உயர்தரப் பாட சாலை.

பிரிவு -4 எஸ். ஐ.ஸஹரதுல் விஜினா கமு/அல்-மஸ்ஹர் உயர் தரப் பாடசாலை.

பிரிவு -5 ச. ஜெயந்திரன் -முல/ யோகபுரம் மகாவித்தி.

**இசையும் அசைவும்**

பிரிவு் -1 குருபரன் நாரணி மட்/ கோட்ட முனை கனிஷ்ட வித்தி.

**இசை தனி**

பிரிவு-2 மாதங்கி இராமநாதன்- யா/இணுவில் இந்துக் கல்லூரி.

பிரிவு-3 மா. ஷயுக்ஷ்னி திரு/ ஸ்ரீ சண்முகா இந்துமகளிர் கல்லூரி.

பிரிவு-4 குலேந்திரன் ஜெக தீசன் யா/யூனியன் கல்லூரி.

பிரிவு-5 ஜீவிகா விவேகானந் தன் யா/யூனியன் கல்லூரி.

**இசை- குழு**

பிரிவு-1 யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

பிரிவு-2 மட்/புனித சிசிலியா பெண்கள் மகா வித்தி.

**நடனம் - தனி**

பிரிவு-1 த.சரவண்யா- யா/ இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை.

பிரிவு-2 யோ.ஹம்சானந்தி -மு/ புதுக்குடியிருப்பு மகாவித்தி.

பிரிவு-3 துவராகா கிருபாகரன் மட்/புனித சிசிலியா பெண்கள் மகா வித்தி.

பிரிவு- 4 பா.அனுஜன் - யா/பெரி யபுலம் மகாவித்தி.

பிரிவு- 5ம/யுமைரூபி - வவு னியா இறம்பைக் குளம் மத்திய மகாவித்தி.

**நடனம் குழு**

பிரிவு-1 மன்/சித்திவிநாயகர் இ.கல்லூரி.

**நாட்டிய நாடகம்**

பிரிவு-2 யா/இந்து மகளிர் கல்லூரி.

**நாடகம்**

திறந்த போட்டி- யா/ஸ்கந் தவரோதயாக் கல்லூரி.

**வில்லுப் பாட்டு**

திறந்த போட்டி- யா/யாழ்ப்பா ணக் கல்லூரி.


**விவாதம்**

திறந்த போட்டி - கல்/ அல் மனார் மத்திய கல்லூரி.

**தமிழறிவு வினா விடை**

திறந்த போட்டி- யா /தெல்லிப் பழை மகாஜனாக் கல்லூரி.

(ற)



யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் அண்மையில் சங்க உறுப்பினர்களுக்கு இலவசமாகப் புகைப்படக் கருவிகளை அதன் அலுவலகத்தில் வைத்து வழங்கியது . உறுப்பினர் ஒருவருக்கு சங்கத்தலைவர் வே. தவச்செல்வம் புகைப்படக் கருவியை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# புதிய ஒப்பந்தம் செய்யும் எண்ணம் அரசுக்கு இல்லை

## அமைச்சர் ஜெயராஜ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில கூடந்த அரசாங்கத்துக்கும் விடு தலைப் புலிகளுக்குமிடையில் கடந்த 2002ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாற்றீடாக புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளும் எண்ணம் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு கிடையாது என்று வர்த்தக வாணிப நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற விவாதம் ஒன் றில் எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருனாநாயக்கா எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த போதே அவர் இக் கரு த்தை வெளியிட்டார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நேர அட்டவணை இதுவரையில் தயாரிக்கப்படவில்லை. ஆனால் நோர்வே அனுசரணையாளரின் உதவியுடன் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முன்னேற்றப் பாட்டு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தை களில் முஸ்லிம்கள் தனித்தரப்புக் கோரிக்கை பற்றி எந்த விதமான தீர்மானத்தையும் அரசாங்கம் இது வரையில் எடுக்கவில்லை.

சிலாபத்துறை மற்றும் மனிரா சங்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளினால் புதிய காவலரண் மையங்கள் அமைக்கப்பட்டிருக் கின்றன என்று ஐ.தே. கட்சியின் குற்றச்சாட்டை மறுத்த அமைச்சர் சிலாபத்தைப் பகுதியில் கடற் புலிகளின் முகாமொன்று 2003ம் ஆண்டு முதல் செயற்பட்டு வரு வது குறித்து தமக்கு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருப்பதாக தெரிவித்தார். (இ-8)

# கிராமசேவை உத்தியோகத்தர்களின் கடமை நாட்களில் புதிய மாற்றம்!

(கொழும்பு)

கிராம சேவை உத்தியோகத் தர்களின் கடமை நாட்களில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக இலங்கை ஐக்கிய கிராமசேவை உத்தியோகத்தர் சங்கப் பிரதிநிதி எஸ். சமரக்கோன் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக தமது சங்கப் பிரதிநிதிகள் உள் நாட்டலு வல்கள அமைச்சர் அமரசிறி தொடங் கொட வுடன் நடாத்திய பேச்சுவார்த தையின் போது, இவ் விடயம்குறித்து இணக்கம் காணப்பட்டதாக சங்கத்தின் பிரதிநிதி தெரிவிததார்.

இதேவேளை கிராம சேவை உத்தியோகத்தர்களின் கடமை நாட்களில் மாற்றம் செய்யப்பட்டமை குறித்து தமக்கு அறிவிக்கப்பட்டுள் ளதாக வடக்கு-கிழக்கு மாகாண கிராம சேவை உத்தியோகத்தர் சங்க செயலாளர் கே. வாமதேவன் தெரிவித்துள்ளார்.

கடமை நாட்களில் மாற் றம் செய்யப்பட்டதற்கமைய கிராம சேவை உத்தியோகத்தர்கள் திங் கட்கிழமை மற்றும் வியாழக்கிழ மைகளில் மு.ப 9 மணி முதல் மாலை 5 மணிவரையும் சனிக்கி ழமைகளில் மு.ப 9 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை தத்தமது அலுவலகங்களில் கட மையாற்ற வேண்டும்.

பொதுமக்கள் தினமான புதன் கிழமைகளில் கிராமசேவை உததி யோகத்தர்கள் பிரதேச செயலகங் களில் சமுகமளித்திருப்பது கட் டாயமாக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பிரதி செவவாய், வெள்ளிக் கிழமைகளில் வெளிக்கள கடமைகளை மேற்கொள்ள வேண் டும்.

இதேவேளை கிராம சேவை உத்தியோகத்தர் ஒருவர் மற்று மொரு பிரதேசத்தில் பதில் கடமை யாற்றும் சந்தர்ப்பங்களின் போது அலுவலகக் கடமை நாட்களில் தளர்வுப் போக்கினை கடைப்பிடிக்க முடியும்.

அத்துடன் தமக்கு உரித்தான பிரதேச அலுவலகத்தில் ஒரு நாள் கடமையாற்றவிட்டு மறுநாள் பதில் கடமையாற்றுகின்ற பிரதேச அலுவலகத்தில் கடமையாற்று கின்ற நடைமுறையினை பின்பற் றலாம்.

கிராமசேவை உத்தியோ கத்தர்கள் வாரத்தில் 5 நாட்கள் கடமையாற்ற வேண்டும் என ஏற்கனவே விடுக்கப்பட்ட அறிவிப் பினால் அவர்களுக்கு வேலைப் பளு அதிகரித்துள்ளதாக சுட்டிக் காட்டியதையடுத்தே, இவ்வாறு கடமை நாட்க ளில் மாற்றம் செய் யப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படு கின்றது. (க.61)

## திறப்புவிழா

யாழ்ப்பாண சமுர்த்தி மகாசங்கம இன்று காலை 10.30 மணிக்கு 46 A, புங்கங்குளம் வீதி கொழும்புத துறையில் திறந்து வைக்கப்பட வுள்ளது.

யாழ்ப்பாண சமுர்த்தி மகாசங்க நிறைவேற்றுக் குழுத் தலைவர் க.தம்பிராசா தலைமையில் இடம் பெறவுள்ள இத் திறப்புவிழா நிகழ் வில் பிரதம விருந்தினராக யாழ் மேலதிக அரச அதிபர் ஆ. சிவ சுவாமி கலந்து கொள்வார்.

(ப-ற)


# சூடாநாட்டின் சிறந்த..

(05.பக்க தொடர்ச்சி....)

| | |
|---|---|
| **சாவகச்சேரி** | |
| நெற்செய்கை | - தியாகராசா சிவநேசன் (இராஜவாசம்,வரணி வடக்கு) |
| மிளகாய்ச் செய்கை | - விவேகாகானந்தம் மனோகரன் (மிருசுவில் வடக்கு,மிருசுவில்) |
| வீட்டுத்தோட்டச் செய்கை | - கந்தையா பாலசிங்கம் (இடைக்குறிச்சி,வரணி) |
| நீர்முகாமைத்துவம் உள்ளடக்கிய செய்கை | -கந்தையா பாலசிங்கம் (இடைக்குறிச்சி,வரணி) |
| பெண் தலைமைத்துவ விவசாயச் செய்கை | - கைலாய பிள்ளை மதுர வரணி (அல்லாரை வடக்கு, மீசாலை) |
| வினைத்திறனான நிலப்பயன் பாட்டைஉள்ளடக்கிய செய்கை | - மார்க்கண்டு கனகலிங்கம் (மந்துவில் கிழக்கு, கொடிகாமம்) |
| **புலோலி** | |
| நெற்செய்கை | - வேலாயுதம் பொன்னுத்துரை (மாலிமந்திடல், புலோலி தெற்கு) |
| மிளகாய்ச் செய்கை | - வி. தயாளகெளவுந்தர் (சேனாங்கன், கரணவாய் மேற்கு) |
| வீட்டுத்தோட்டச் செய்கை | - பிறைசூடி அமிர்தலிங்கம் (மாதனை, புலோலி வடக்கு) |
| நீர்முகாமைத்துவம் உள்ளடக்கியசெய்கை | - தா. கதாகரன் (கரணவாய் மேற்கு) |
| பெண் தலைமைத்துவ விவசாயச் செய்கை | - தேவசிரோண்மணி முத்துராசா (காளிகோவிலடி, கெருடாவில் தெற்கு) |
| வினைத்திறனானநிலப்பயன் பாட்டைஉள்ளடக்கிய செய்கை | - தி. அருணாசலம் ( கரணவாய்மத்தி,கரவெட்டி) |
| **அம்பன்** | |
| நெற்செய்கை | - தம்பியப்பா விஜயரட்ணம் (குடத்தனை) |
| மிளகாய்ச் செய்கை | - கந்தையா இரத்தினம் (நித்தியவெட்டை, முள்ளியான்) |
| வீட்டுத்தோட்டச் செய்கை | - முத்தையா குமாரகுல சிங்கம் (செம்பியன் பற்று தாழையடி) |
| நீர்முகாமைத்துவம் உள்ளடக்கிய செய்கை | - பரராஜசிங்கம் வேலும் மயிலும் (குடத்தனை அம்பன்) |
| பெண் தலைமைத்துவ விவசாயச் செய்கை | - சந்திரசேகர் அமுதினி (போக்கறுப்பு) |
| வினைத்திறனான நிலப்பயன் பாட்டை உள்ளடக்கிய செய்கை | - செல்வசேகரம் ராஜேந்திரம் (மருதங்கேணி) |
| **மாவட்ட ரீதியான தெரிவு** | |
| **உடுவில** | |
| ஒருங்கிணைந்த விவசாயச் செய்கை | - செல்லப்பா கிருஸ்ணகுலசிங்கம் (மின்சார நிலைய வீதி சுன்னாகம்) |
| **கீரிமலை** | |
| பாதுகாப்பான விவசாயச் செய்கை | - நடேசு கணேசு (டச் வீதி மானிப்பாய் |
| **சாவகச்சேரி** | |
| பழ மர நடுகை பொருட் செய்கை | - மாணிக்கம் நவரத்தினம் (கெற்பேலிகொடிகாமம்) |
| **புத்தூர்** | |
| வாழைச்செய்கை | - வேலுப்பிள்ளை தர்மலிங்கம் (சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி) |
| **உரும்பிராய்** | |
| தேசிச் செய்கை | - செல்லையா தில்லையம்பலம் கோண்டாவில் வீதி கோப்பாய்) |
| **கீரிமலை** | |
| திராட்சைச் செய்கை | - நல்லதம்பி தெய்வநெடுமாறன் பெரியவிழான் இளவாலை) |
| **தொல்புரம்** | |
| அழகுத்தாவரம் | - சிவாஜினி பவானந்தன் சுழிபுரம் மேற்கு) |
| **புங்குடுதீவு** | |
| பாரம்பரிய சிறுதானியச் செய்கை | - தில்லை நாதன் சிறிமணன் (2ம் வட்டாரம் நெடுந்தீவு மேற்கு) |

# உள்ளத்தை உயர்த்தவும் பண்படுத்தவும் தெய்வ பக்தியே உறுதுணை புரியும்

பக்தி, பக்தி வெள்ளம், பக்திப் பெருக்கு, பக்தி வைராக்கியம், பக்தி இலக்கியம் என்று



எல்லாம் பல பொருள்பட பேசுவார்கள். இந்தப் 'பக்தி' என்றால் என்ன? பக்தி எங்கே உற் பக்தியாகின்றது? எதைப் பற்றிக் கொள்கின்றது? இந்த வினாக்களுக்குக் கிடைக்கும் தெளிவான விடைதான் பக்தியின் ஆணிவேர் எனலாம்.

ஒன்றைப் பற்றிக் கொள்வது பக்தி எனலாம், பற்று வைக்கும் இடம் எல்லாம் பக்தியாகிவிடாது. இங்கே பக்தி என்பது தெய்வத்திடம் வைக்கும் பற்றையே பக்தி எனலாம் அது தெய்வ பக்தி. தெய்வ பக்தி ஒன்றையே பக்தி என்று சுருங்கச் சொல்வர். அல்லாமல் மனம் அவாவும், பற்றையெல்லாம் பக்தி என்று பெயரிட்டு அழைப்பதில்லை. அதனால் மனம் பற்றுவதை எல்லாம் பக்தி எனாமல் கடவுளிடத்து செலுத்தும் அன்பு ஒன்றையே பக்தி என்னும் சொல் தரும் பொருள் தெய்வ பக்தியின் உயர்விற்கு ஓர் எடுத்துக்காட்டு.

உலகப் பற்றுகள் எல்லாம் உள்ளத்தைப் பற்றாதிருக்க கடவுளிடத்து பற்று வைக்க வேண்டும். அந்தப் பற்றை நாளிலும் பொழுதிலும் பயின்று பயின்று பக்தியாக மாற்றிக் கொள்ளவேண்டும். தேவை கருதிச் செலுத்தும் பற்று பக்தி

## வெள்ளிநற்சிந்தனை

யாக மாட்டாது. தேவை நிறைவாகப் பற்றும் போய்விடும், பக்தியும் போய்விடும். பக்தி ஒருநாள் இரண்டு நாளில் வந்து (நீ)லாதி காலமாகத் தூய அன்போடு இறைவனிடத்தில் பலன் கருதாது பழகிவருவதால் உயிர்ப்பது பக்தி. பக்தி உள்ளத்தில் ஊற்று எடுக்க வேண்டும். உலகத்தை வெறுத்து இறைவனிடத்தில் பக்தி வைக்க இயலாதவரை கடவுளிடத்தில் வளரும் பக்தி வைராக்கியத்தால் உலகப் பற்றுப் படிப்படியாக தானாக - கனிந்த கனி காம்மை வெட்டு விலகுவதுபோல விலகும். அந்த விலகலில் தெளிவு பிறக்கும். தெளிவு பிறக்க தத்துவ ஞானம் தலைகூடும்.

உள்ளம் பக்திப் பரவசத்தில் திளைக்க ஒன்றையே காதலிக்க வேண்டும். அந்த ஒன்று மெய்பொருள் 'ஒன்று காதலித்துள்ளமும் ஓங்கிட' என்பது பெரிய புராணம்,

என்றும் இன்பம் பெருகவும் உள்ளமும் உயர் பலதைக் காதலிக்காமல் ன்றையே காதலிக்க வேண்டும்.

மனம் ஒரு குரங்கு என்பர். குரங்கு கொப்புவிட்டு கொப்புத் தாவுவது போல மனமும் அலை பாயும். அதை மடக்கிக் கட்டுபாட்டில் நிறுத்த ஒன்றையே மனத திற்கு காதலிக்கக் கற்பிக்க வேண்டும்

உள்ளம் பக்தி செய்யும் உயர் பரம்பொருள் செம் பொருளான மெய்ப்பொருளை இறுகப் பற்றிக் கொள்ளவேண்டும்.

''உயிராவனமிருந் துற்று நோக்கி உள்ளக் கிழியினுருவெழுதி உயிரா வணஞ் செய்திட்டு....' என்பது அப்பரடிகளாருடைய அருள்வாக்கு.

திருநல கண்டத்துக் குயவனார், இயற்பகையார், கண்ணப்பர், சண்டீசர், அப்பூதி அடிகளார், சிறுத் தொண்டர் போன்ற நாயன்மார்களுடைய வாழ்க்கையில் நாம் வியக்கும் நிகழ்ச்சிகள் பற்றற்ற பரம்பொருளைப் பற்றிப் பக்தி செய்து பழுத்ததால் நிகழ்ந்தவைகள் அன்றோ.

உள்ளம் உயரவும், பண்படவும் நல்லுணர்வுகளால் அல்லுணர்வுகளை அடக்கவும் தெய்வ பக்தியை வளர்க்க முயல்வோமாக. □

**சிவ சண்முகவடிவேல்**

# பொருட்களைக் களவாடிய நபருக்கு 3 வருட கடூழியச் சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் வீடை உடைத்துப் பொருட்களைக் களவாடிய நபர் ஒருவருக்கு யாழ் மாவட்ட நீதிபதி ஆர்.ா.விக்னராஜா 3 வருடகால கடூழியச் சிறைத் தண்டனையும், 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துள்ளார்.

யாழ்.பிரதான வீதியிலுள்ள வீடொன்றைக் கடந்த மார்ச் மாதம் 5 ஆம் திகதி பட்டப்பகலில உடைத்து அடாவடித்தனமாக உட்புகுந்து பொருட்களைக் களவாடிய குற்றச்சாட்டின பேரில் கைது செய்யப்பட்ட குருநகர் பீச்றோட்டைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரீ.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி பிரஸ்தாப நபருக்கு 3 வருடகால கடூழியச் சிறைத்தண்டனை விதித்ததுடன், 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துள்ளார். அபராதப் பணத்தொகை செலுத்தத் தவறும் பட்சத்தில் 6 மாத காலம சிறைத்தண்டனை மேலும் நீடிக்குமெனவும் உத்தரவிடப் பட்டுள்ளது.

அத்துடன், களவாடப்பட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டு நேற்று முன்தினம் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ந-19)

# 'போர் நடந்த மண்ணில்' நூல் வெளியீடு இன்று

(கிளிநொச்சி)

புலிகளின் குரல் வெளியீடான 'போர் நடந்த மண்ணில்' நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிககிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2001 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட வானோசை-11 மற்றும் கேணல் கிட்டு நினைவு கலை இலக்கிய போட்டிகளில் பரிசு பெற்று படைப்புக்களை தாங்கி இந் நூல் வெளிவருகிறது.

இந்நூலில், போராளிகளான மலைமகள், தூயவன், அரும்பொருள், யோகன் மற்றும் யோ.கருணன் ஆகியோரின் சிறுகதைகளும் போராளிகளான யாழ்வீரன், ரகுபதி, கவியழகன் மற்றும் ஊரவன், தனுசியா மகேந்திரன் ஆகியோரின் கவிதைகளும் மலரண்ணா, ஆவரங்கால் சுதன், பிரஞ்சன், கை.சரவணன், போராளி ஆ.ந.பொற்கோ ஆகியோரின் நாடகங்களும் போராளிகளான பழனி, செந்தோழன், செங்கையன் ஆகியோரின் ஒளிப்படங்களும்.

போராளி நீதன், கெங்காதரன், காங்கேசன், பயஸ்ராஜா ஆகியோரின் ஓவியங்களும் போராளிகளான புரட்சி, யாழ்வீரன், கலையழகன் ஆகியோரின் கட்டுரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (த)



வந்தது மழை மட்டுமல்ல வளமும் தான். பல ஆண்டுகளாக தொடர்ந்து வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்த சிவகங்கை மாவட்டத்தில் இந்த ஆண்டு தாமதமாக பருவமழை தொடங்கியுள்ளது. தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக விவசாயிகள் நம்பிக்கையுடன் பணிகளைத் தொடங்கியுள்ளனர்.

# குஜராத்தில் இலஞ்ச ஊழலை ஒழிக்க முதல்வர் நரேந்திரமோடியின் 'கர்மயோகி'

## கதிகலங்குகிறார்கள் அரச ஊழியர்கள்

குஜராத்தில் கர்மயோகி இயக்கத்தால் அரசு ஊழியர்கள் கதிகலங்கி இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களைப் பற்றியும், உயர் அதிகாரிகள், துறையில் நிலவும் ஊழல் நிலவரத்தையும் எழுத்து மூலம் சமர்ப்பிக்க முதல்வர் நரேந்திரமோடி உத்தரவிட்டுள்ளார்.

குஜராதநில் அரசு நிர்வாகத்தை சீரமைக்க முதல்வர் நநேரந்திர மோடி அதிரடி நடவடிக்கைகளை துவக்கி இருக்கிறார். அதற்காக விநாயகர் சதுர்த்தி நாளன்று கர்மயோகி என்ற ஆய்வியக்கம் வதோதராவில் தொடக்கப்பட்டது. இந்த ஆய்வியக்கம் அக்டோபர் 30 ஆம் திகதி டங்ஸ்நகில்நிறைவடைகிறது.

குஜராத்தில் ஐந்து லட்சம் அரசு ஊழியர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கேள்விக் கொத்து வழங்கப்படுகிறது.

இந்த கேள்விக் கொத்துடன் முதல்வர் நரேந்திரமோடியின் வேண்டுகோள் கடிதமும் இணைக்கப்பட்டு உள்ளது. அதில் அன்பார்ந்த அரச ஊழியர்களே வேறு எந்த அரசும் இதுபோன்ற முயற்சியில் ஈடுபடவில்லை என்பதை நானறிவேன். மாநில வளர்ச்சிக்காக முதல முறையாக உங்கள் ஆலோசனையை நாடி இருக்கிறேன். அதில் நீங்களும் பங்கேற்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்துங்கள் என கூறப்பட்டிருக்கிறது.

அரசு ஊழியர்கள் இந்த கணக்கெடுப்பை கண் துடைப்பு என ஆர்ப்பரிக்கின்றனர். அரசு ஊழியர் சங்கத் தலைவர் யோகென் சேவக் கூறுகையில், முதல்வராக பொறுப்பேற்று இரண்டரை ஆண்டுகளாகிவிட்டது நரேந்திரமோடி இதுவரை எங்களை ஒருமுறை கூட சந்திக்கவில்லை. அவருக்கு இந்த ஆய்வை நடத்த எந்த உரிமையும் இல்லை. இதற்கு பதிலாக பொது மக்களிடம் இந்த அரசைப் பற்றி எங்கள் கருத்தை சொல்வோம் அரசு நிர்வாகம் சிறப்பாக இருப்பதாக தம்பட்டமடிக்க மோடி முயற்சிக்கிறார் என்று தெரிவித்தார். (து)

# காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை கர்நாடக அரசு தடுக்கும் முயற்சியில்

## ம.தி.மு.க. கணேசன் தெரிவிப்பு

(வேலூர்)

காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை கர்நாடக அரசு தடுக்கப் பார்க்கிறது, என்று ம.தி.மு.க., எம்.பி.,கணேசன் கூறினார். தமிழக முதல்வரை அவதூறாகப பேசிய வழக்கில் வேலூர் நீதிமன்றத்தில் சரணடைய வந்த ம.தி.மு.க., எம்.பி.கணேசன் நிருபர்களிடம் கூறுகையில் பொடா சட்டத்தை மத்திய அரசு ரத்துச் செய்தது வரவேற்கத்தக்கது.

ஆனால், முன் திகதியிட்டு இந்த சட்டம் ரத்து செய்யப்பட்டிருந்தால் தான் ம.தி.முக.வுக்குத் திருத்தியளிக்கும். இந்த சட்டம் இயற்றப்பட்ட திகதியிலிருந்து வாபஸ் பெறப்பட்டிருந்தால் அதனால் பல விளைவுகள் ஏற்படும் என்றார்.

மேலும் தொடர்கையில், இப்போது மழை பெய்து வருவதால் காவிரி பிரச்சினையை மக்கள் மறந்து விட்டனர். ஆனால், ம.தி.மு.க., மறக்கவில்லை. உரியமுறையில் இதற்கு பரிகாரம் காணப்படும். காவிரி ஆணையத்தில் சில மாற்றங்கள் செய்யவேண்டும்.

காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிக்கின்றோம், ஆனால், அதை கர்நாடக அரசு தடுக்க பார்கிறது. மத்திய அரசு இதற்கு துணை போகாமல் இந்த பிரச்சினையை தீர்க்கவேண்டும் இறுதி தீர்ப்பு நமக்கு சாதகமாக வரும் என்று சொல்லமாட்டேன். ஆனால், நியாயம் கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

சேது சமுத்திரத் திட்டம்வராததற்கு மத்தியில் நேரு காலத்தில் இருந்து இன்றைய அரசுகள் வரை தான் காரணம். நேரு இந்த திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்தபோது, இந்தியாவுக்கு அண்டை நாடுகள் எல்லாம் பகை நாடுகள் ஆகிவிட்டன. இலங்கை மட்டும் நட்பு நாடாக இருக்கவேண்டும் என்று கருதியதால், தமிழகத்தின் நலனை பலியிட்டு இலங்கை நட்புறவு என்ற ஒரேகாரணத்திற்காக இந்திய அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று கணேசன் தெரிவித்துள்ளார். (து)

## இந்தியச் செய்திகள்

# இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அமெரிக்க அதிபர் புஷ்சுடன் பேச்சு

(நியூஜோர்க்)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அமெரிக்க அதிபரைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத் தொடருக்கு சென்ற இடத்தே நியூஜோர்க்கில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இருநாட்டு வெளியுறவுத்துறை அதிகாரிகள் சகிதம் இருவரினதும் சந்திப்பு நடைபெற்றிருக்கின்றது.

சுமார் ஒரு மணி நேரம் இடம் பெற்ற இச் சந்திப்பின்போது இரு நாட்டு அதிகாரிகளும் பல ஆக்க பூர்வமான விடயங்கள் பற்றி பேச்சுக்களை நடத்தினர்.

பேச்சின்போது முக்கியமாக தொழில்துறை அனுபவங்கள் வர்த்தகம் போன்றவற்றில் இரு நாடுகளும் தொடர்புகளை மேம்படுத்துவதன்றும் கருத்துக்களைப் பறிமாறிக்கொண்டார்கள்.

இதேவேளை, இந்திய பாக்கிஸ தான் சமாதானப்பேச்சுகளை அமெரிக்கா வரவேற்கிறதென்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனூடே இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றியும் பேச்சுகள் நடந்ததாக செய்தியாளர் தங்கவேலின் குறிப்பிலிருந்து அறியக் கூடியதாகஇருக்கிறது. (து)



காஷ்மீர் முதல்வர் முப்தி முகமது சயீது வேட்பு மனுத் தாக்கல் செய்து விட்டு திரும்பியபோது அவரை கொல்ல கையெறி குண்டு வீச்சு நடந்தது. அந்த இடத்தைப் பொலிஸார் பார்வையிடுகின்றனர்


# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

**சமூகக்கல்வியும் வரலாறும் I**
**மணி - 1**

ஆக்கம் :
திரு க. அருந்தவராஜா B.A, Dip in Ed, Med
(ஆசிரியர் யா/செங்குந்த இந்துக் கல்லூரி)

★ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
★ **1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு 1,2,3,4 எண்ணிடப்பட்டு விடைகள் தரப்ட்டுள்ளன. மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக**
★ **தரப்பட்ட இலங்கைப்படத்தைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**




01.'Z'என்ற எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இடத்தில் செய்கை பண்ணப்படும பெருந்தோட்டப்பயிா
1.தேயிலை 2.இறப்பர் 3.தென்னை 4.கோப்பி

02. இலங்கைபபடத்தில கண்டியில் இருந்து யாழ்பாணம் வரைக்கான A-9 நெடுஞ்சாலை காட டப்பட்டுள்ளது. இதில் A,B,C,D எனக் குறிக்கப் பட்டுள்ள நகரங்க்ள் முறையே
1. கணடி, குருநாகல், புத்தளம், யாழ்ப்பாணம
2. கண்டி, தம்புள்ள, வவுனியா, யாழ்ப்பாணம
3. கண்டி, நுவரெலியா, வவுனியா, யாழ்ப்பாணம்
4. கணடி, தம்புள்ள, கந்தளாய், யாழ்ப்பாணம்


03. முறிகோடுகளினால் வட்டமிடப்பட்டுள்ள இலங்கையின் பன்னாட்டு விமான நிலையம் குறித்து நிற்கும் இடம்.
1. இரத்மலானை 2. அரணாயக்கா
3. பலாலி 4. கட்டுநாயக்கா

04.C என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள குடா குறிப்பது
1.வெலிகமகுடா 2. அறுகம்குடா 3. கொட்டியாரக்குடா 4.கெநதலைகுடா

05. Tஎன்ற இடத்திலுள்ள நகரம் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது
1.கலாசார நகரம் 2.விளையாட்டு நகரம்
3.சுற்றாடல் நகரம் 4.சமாதான நகரம்

**தரப்பட்ட உலகப்படத்தினைப் பயன்படுத்தி 6-10 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

06. ஆசியாக்கண்டத்தில் அபிவிருத்தி அடைந்த நாடு எந்த எழுத்தினால்




குறித்துக் காட்டப்படுகிறது.
1. A 2.B 3.C 4.D

07. K என்ற எழுத்தினால் காட்டப்படுவது இவ்வாண்டு யூரோக் கிண்ணஉதைப்பந்தாட்ட இறுதிப்போட்டி நடைபெற்ற நாடாகும். அது எது?
1.கிரேக்கம் 2.போர்த்துக்கல் 3.ஜேர்மனி 4.இத்தாலி

08. நன்னம்பிக்கை முனையை காட்டி நிற்கும் எழுத்து
1.Y 2.L 3.P 4.R

09. இலங்கையின் சமாதான முயற்சிகளில் அதிக ஈடுபாடு காட்டும் நோர்வே நாட்டினைக் குறிக்கும் எழுத்து
1.V 2.P 3.T 4.S

10. முறிகோடுகளால் காட்டப்பட்டுள்ளவற்றுக்கு தெற்கேயுள்ள நாடுகள் பொதுவாக அபிவிருத்தி அடைந்த நாடுகள் ஆகும். இவை A,B,C,D எனக் குறிக்கப்பட்டுள்ளன அவை முறையே.
1. தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா,சீனா, வடகொரியா
2. இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், யப்பான்
3. பிறேசில், மடகஸ்கார், இந்தோனேசியா, தென்கொரியா
4. ஆர்ஜன்டீனா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து

11. புராதன் காலத்தில் இலங்கையுடன் வர்த்தகத்தில் ஈடுபட்ட ஐரோப்பிய நாடுகள்
1. ஸ்பெயின், போர்த்துக்கல் 2.அரேபியர், ஒல்லாந்து
3. இங்கிலாந்து, நோர்வே 4.கிரேக்கம், உரோம்

12. மின்னேரித் தெய்வம் எனப் போற்றப்படும் அரசன் யார்?
1. காசியப்பன் 2.மகாசேனன் 3. எல்லாளன் 4.வசபன்

13. நிந்தகம் என்பது குறிப்பது
1. மந்திரியின் நிலம் 2. விகாரைகளுக்கான நிலம்
3. அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் 4. மக்களுக்கான நிலம்

14. அநுராதபுர நகரம் அமைக்கப்படுவதற்கு அடிப்படையாக இருந்த நதி
1.வளவகங்கை 2.மகாவலிகங்கை 3.தெதுறுஓயா 4.மல்வத்து ஓயா

15. குளத்தில் இருந்து தேவையேற்படும் போது நீரைவெளியேற்ற அமைக்கப்பட்ட துவாரம்
1. கலிங்கல் 2. அலைதாங்கி 3. குளக்கட்டு 4.சுரங்கம்

16. போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முடியாமல் போனமைக்கான சரியான கூற்று
1. முப்படைகளையும் போருக்குப் பயன்படுத்தியமை
2. நவீன பீரங்கிகள்,துப்பாக்கிகள் பயன்படுத்தியமை
3. கோட்டை, யாழ்ப்பாண இராச்சியங்களில் இருந்து உதவி பெற்றமை
4. கெரிலா (பதுங்கித் தாக்குதல்) முறைகளை பரந்தளவில் மேற்கொண்டமை

17. சோல்பரி யாப்புக்கு அமைவாக சட்டங்கள் இயற்றுவதற்று நிறுவப்பட்ட இரு சபைகள்
1. பிரதிநிதிகள்சபை,செனற்சபை 2.மந்திரிகள்சபை,நிர்வாகசபை
3. இராஜசபை,சட்டசபை 4.செனற்சபை, அதிகாரிகள்சபை

18. இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சியில் காணப்படாத விடயங்களில் பொருத்தமானவை
1. புகையிரதவீதிகள், பெருந்தெருக்கள் அமைத்தல்
2. தேயிலை, இறப்பர் உற்பத்தியில் ஈடுபடல்
3. சுதேச மன்னர்களிடம் இருந்து வரிகளை பெற்றுக்கொள்ளல்
4. கல்விக்கான வாய்ப்புக்களை விரிவாக்கியமை

19. இலங்கையில் அரசியல் யாப்பு சீர்திருத்தம் செய்யவேண்டுமாயின் தேவைப்படும் ஆகக்குறைந்த பாராளுமன்ற வாக்குப்பலம்
1. மூன்றில் இரண்டு 2. இரண்டில் ஒன்று 3. நாலில் ஒன்று 4. மூன்றில் ஒன்று

20. இலங்கையின் பாராளுமன்ற சபாநாயகர் தெரிவு செய்யப்படுவது
1. ஜனாதிபதியால் 2. மக்களால்
3. பாராளுமன்றத்தால் 4. உயர் நீதிமன்றத்தால்

21. இலங்கையில் பணத்தை வெளியீடு செய்யும் உரிமை கொண்ட வங்கி
1.செலான்வங்கி 2.மத்தியவங்கி 3.இலங்கைவங்கி 4.மக்கள்வங்கி

22. சப்ரா(SAFTA)உடன்படிக்கையை உருவாக்கிக் கொண்ட அமைப்பு
1.சார்ஜா கிண்ண நாடுகள் 2. ஒபேக்தாபனம்
3.சர்வதேச ஒத்துழைப்புக்கான அமையம் 4. சார்க்அமையம்

23. இலங்கையில் தற்பொழுது நடைமுறையில் உள்ள மாகாணஅரசுகளின் எண்ணிக்கை
1. 08 2. 09 3. 10 4. 11

24. பிரதேசவாரி பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்தியது
1. கோல்புறுக் ஆணைக்குழு 2.சோல்பரிஆணைக்குழு
3.டொனமூர் ஆணைக்குழு 4. மக்கலம் ஆணைக்குழு


25. இலங்கையில் ஒருவர் தனது அடிப்படை உரிமை மீறப்படுவதாகக் கருதின் அவர் முறையீடு செய்யக் கூடிய நீதிமன்று
1. மாவட்ட நீதிமன்று 2. மேல்நீதிமன்று
3. மேன்முறையீட்டுமன்று 4. மீயுயர் நீதிமன்று

26. A. உயர்வருமானம், உயுர்வான கல்வித்தரம்
B. உயர்வருமானம், குறைவான கல்வித்தரம்
C. குறைவான வருமானம், உயர்வான கல்வித்தரம்
D. குறைவான வருமானம், குறைவான கல்வித்தரம்

மேற்படி நான்கு தரவுகளுக்கும் (A,B,C,D) பொருத்தமான நாடுகளின் தொகுதி முறையே

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| 1. | அமெரிக்கா, | சவுதிஅரேபியா, | இலங்கை, | பூட்டான் |
| 2. | யப்பான், | ஜேர்மனி, | இத்தாலி, | சிங்கப்பூர் |
| 3. | சீனா, | இந்தியா, | இலங்கை, | பிலிப்பைன்ஸ் |
| 4. | அமெரிக்கா, | யப்பான், | இந்தியா, | சீனா |

27. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவம் பெற்றுள்ள ஆசிய நாடு எது?
1. யப்பான் 2. இந்தியா 3. பாகிஸ்தான் 4. சீனா

28.



மேற்படி வரைபடம் தெளிவாகக் காட்டும் கருத்து
1. சனத்தொகையும் அதிகரிக்கின்றது உணவு உற்பத்தியும் அதிகரிக்கின்றது இது பொருளாதாரத்தை முன்னேற்றும்.
2. சனத்தொகை வளர்ச்சிக்கேற்ப உணவு உற்பத்தி அதிகரிக்காமையால் இது பொருளாதாரத்தைப் பாதிக்கும்
3. உணவு உற்பத்தி அதிகரிப்புக்கேற்ப சனத்தொகை அதிகரிக்காமையால் இது பொருதாரத்தைப் பாதிக்காது

29. பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் தொடர்பாக பொருத்தமல்லாதது
1. சிசுமரணம் 2.எழுத்தறிவுவீதம்
3. பிறப்பின்போது எதிர்பார்க்கும் ஆயுள்காலம் 4.கொள்வனவு சக்தி

30. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமையத்தில் (ஒபெக்) அங்கத்துவம் பெறாத நாடு
1.சவுதிஅரேபியா 2. ஈரான் 3. குவைத் 4. அமெரிக்கா

31. தென்னரைக்கோளத்தில் உள்ள அபிவிருத்தி அடைந்த நாடுகளை காட்டும் பொருத்தமான தொகுதி
1. பிறேசில்,மடகஸ்கார், இலங்கை, நியூசிலாந்து
2. அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர்
3. தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஆர்ஜன்டீனா
4. அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, சீனா

32. மத்தியகிழக்கு நாடுகள் உள்ளடக்கப்படுகின்ற கண்டம் எது?
1.ஆசியா 2. ஆபிரிக்கா 3. ஐரோப்பா 4. ஓசானியா

33. சார்க் அமையத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகளின் எண்ணிக்கை
1. 05 2. 06 3. 07 4. 24

34. உலக நாடுகளில் உணவுப் பற்றாக்குறையால் பாதிப்படைந்துள்ள நாட்டுத்தொகுதிகளில் முக்கியமானது
1. இலங்கை, இந்தோனேசியா, தென்கொரியா, பர்மா
2. சூடான், சோமாலியா, தன்சானியா, நைரோபி
3. இந்தியா, மாலைதீவு, சுவீடன்,கனடா
4. சூடான், ஸ்ரேல், ஈராக்,நியூசிலாந்து

35. றொக்கிஸ் மலைத்தொடர் அமைந்துள்ள நாட்டுத் தொகுதிகளில் பொருத்தமானது.
1.சில்லி, ஆயன்டீனா, பிறேசில் 2. லிபியா, அல்ஜீரியா, எகிப்து
3. இந்தியா, சீனா,பாகிஸ்தான் 4. கனடா, ஐக்கிய அமெரிக்கா, மெக்சிக்கோ

36. ஏற்றுமதிப் பன்முகப்படுத்தல் என்றால் என்ன?
1. பொருட்களை பல நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தல்
2. விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்தல்
3. கைத்தொழில் பொருட்களை ஏற்றுமதி செய்தல்
4. ஏற்றுமதிப்பொருட்களின் பல் வகைத் தன்மைகளை அதிகரித்தல்

37. ஆள்வீத தேசிய உற்பத்தி கணிக்கப்படும் முறையானது
1. கைத்தொழில் பொருட்களின் வருமானத்தை அளவிட உதவும்
2. விவசாயப்பொருட்களின் வருமானத்தை அளவிட உதவும்
3. தனிநபரின் வருமானத்தை அளவிட உதவும்
4. ஒருவர்தனித்து உற்பத்திசெய்யும் பொருட்களின் வருமானத்தை அளவிடமுடியும்

38. "சாதகமான வர்த்தக நிலுவை" என்பதனால் விளங்கிக்கொள்ளப்படுவது
1. ஏற்றுமதி வருமானத்தை விட இறக்குமதி செலவுகள் உயர்வாகக் காணப்படல்
2. இறக்குமதி செலவுகளை விட ஏற்றுமதி வருமானம் உயர்வாகக் காணப்படல்
3. ஏறறுமதி வருமானங்களும் இறக்குமதி செலவுகளும் சமனாகக் காணப்படல்
4. வர்த்தகங்களில் நிலுவைகளைத் தொடர்ந்து பேணுதல்

39. பிரசை ஒருவர் வெளிநாடு செல்லவேண்டுமாயின் தனது கடவுச்சீட்டுடன் செல்லவேண்டிய இடம்
1. பொலிஸ் நிலையம் 2. நீதிமன்றம்
3. வெளிநாட்டுத்தூதுவராலயம் 4.வெளிநாட்டமைச்சு

40. இலங்கையின் நாணயம் சர்வதேச பணச் சந்தையில்
1.மென் நாணயம் 2. பொதுநாணயம் 3.வன்நாயணம் 4. தாள்,குற்றிநாணயம்.

## இன்று ஒரு தகவல்

# காலம் போற்றும் கதிர்கள்

ஒரு சோதனைச் சாலைக்குள் ஒருவர் உட்கார்ந்திருந்தார். ஒரு நாளில் 20 மணிநேரம் அங்கேயே உட்கார்ந்திருந்து ஆகாயத்தைப் பார்த்திருந்தார். மனைவி அவரிடம் போய் சாப்பிட வருமாறு அழைத்தார். அவர் காதில் அது விழவே இல்லை. 1895 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி அன்று மாலையில் அந்த ஆராய்ச்சி நிலையத்தில் அவர் மட்டும் தான் இருந்தார்.

உதவியாளர்களெல்லாம் வீட்டுக்குப் போய் விட்டார்கள. ஒரு வெற்றிடக் கண்ணாடிக் குழாயில் மின்சாரத்தைச் செலுத்தி இவர் ஏதோ செய்து கொண்டிருந்தார். அந்தக் கண்ணாடிக் குழாயில் கறுப்புத்தாளைச சுற்றியருந்தார். வெளிச்சம் வெளியே வராமல் இருக்க அறையில் இருந்த விளக்குகளையும் அணைத்து விட்டார். இப்போது அந்த வெற்றிடக் குழாயினுள் மின்சாரத்தைச் செலுத்தினார். வெளிச்சத் தடுப்புக்காக சுற்றியிருந்த கறுப்புக் காகிதம் தானாக ஒளிவிட ஆரம்பித்தது.

போயம், பிளாட்டினோ,சயனைற் என்ற இரசாயனம் தோய்க்கப்பட்டகாகிதம் அது. ஒளிக்கற்றையின் புலனாகாத கதிர்களைக் காட்டக் கூடியது அந்த இரசாயனம். கறுப்புக் காகிதத்தால் மூடப்பட்ட குழாயிலிருந்து புலனாகாத மர்மக் கதிர்கள் வெளியே வருகின்றமை தெரிந்தது. உலகத்திற்கு ஒரு மகத்தான கண்டுபிடிப்புக் கிடைத்தது. அது தான் எகஸ்ரே. கண்டுபிடித்த விஞ்ஞானி ராண்ட்ஜன்.

இவர் அந்தக் கதிர்களின் தன்மைகளை ஆராய்ச்சி செய்தாா. பிளாட்டினம், ஈயம் தவிரமற்ற எல்லாப் பொருட்களையும் இந்தக் கதிர் ஊடுருவிச் செல்லக் கூடியது என்பதும் புரிந்தது. இந்தக் கதிரை தனது கையில் ஊடுருவச செய்து அதை ஒரு தகட்டில் பதிவு செய்தார். கை எலும்புகள் துல்லியமாகத் தெரிந்தது. மனைவியின் கைகளை எக்ஸ்ரே கதிர்கள் மூலமாகப் படம் எடுத்தார். மனைவியின் கை எலும்புகளுடன் திருமண மோதிரமும் அதில் தெரிந்தது.

மருத்துவ உலகிலும் தொழில்துறையிலும் இந்தக் கணடுபிடிப்பு ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. ஆரமபத்தில் அவரை எல்லோரும் அலட்சியமாகத் தான் பார்ததார்கள். எக்ஸ்ரே கண்டுபிடிப்பிற்குப் பின்பு தான் அவர் எப்படிப்பட்டவர் என்பதை எல்லோரும் புரிந்து கொண்டார்கள்.

ஜெர்மனியின் பேரரசர் கெய்சர். அவரது முன்னிலையிலேயே ராண்ட்ஜன் எக்ஸ்ரேயை இயக்கிக் காட்டினார். அந்த மன்னருக்கு இடது தோளில் ஒரு கோளாறு. அதைப் படம்பிடித்துக் காட்டினார். கோளாறு என்னவென்பதும் புரிந்தது. சிகிச்சையும் சுலபமானது.

எக்ஸ்ரேயைக் கண்டுபிடித்த போது மக்களுக்கு ஒரு புறம் பயம், இன்னொரு புறம் வியப்பு. ஆடைகளை ஊடுருவிப் பார்க்கக் கூடிய கண்டுபிடிப்பு இதுவென்று செய்திகள் பரவ ஆரம்பித்தன. அதனால் எல்லோரும வெளியே நடமாடவே பயந்தார்கள்.

இதனால் என்ன ஆனது தெரியுமா? சில துணி வியாபார நிறுவனங்கள் விளம்பரம் கொடுத்தன இப்படி. அதாவது "எங்கள் நிறுவனத்தின் உள்ளாடைகள் பாதுகாப்பானவை. எக்ஸ்ரே கதிர்களால் துளைக்க முடியாதபடி இவை உருவாக்கப்பட்டுள்ளன" என்று வதந்திகள் மக்களை மிகவும் குழப்பிவிட்டது. அந்தக் காலத்திலெல்லாம இசை நாட்டிய நிகழ்ச்சிகள் அதிகம். இன்று சினிமா அதிகமானது போல.

இநத ஆபரா நிகழ்ச்சிகளுக்காகப் பெரிய அரங்குளெல்லாம் உண்டு. கடைசி வரிசையில் இருப்பவர்கள தொலை நோக்கியை வைத்துப் பார்ப்பார்களாம். "ஆபராகிளாஸ்" என்றே அவற்றிற்குப் பெயர். எக்ஸ்ரே ஏற்படுத்திய வதந்தியால் நிகழ்ச்சி நடத்தும் கலைஞர்கள் கலவரப்பட்டுப் போய் விட்டார்களாம்.

அமெரிக்காவில் ஒரு மாகாணத்தில் விசித்திரமாக ஒரு சட்டம் போட்டார்களாம். இனி ஆபரா அரங்குகளில் எக்ஸ்ரே கதிர் உள்ள தொலைநோக்குக் கண்ணாடிகளைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்படுகிறது இது தான் சட்டம். இப்படிப்பட்ட கண்ணாடி செய்வது சாத்தியமா என்று தெரியாமலேயே சட்டம் இயற்றினார்கள் என்பது ஆச்சரியமான விடயம் தான்.

அது இருக்கட்டும். இப்போது எக்ஸ்ரே எதற்கெல்லாம் உபயோகப்படுகிறது தெரியுமா? ஒரு இளைஞன் டாக்டரிடம போனான்." டாக்டர் நான் உங்களுடன் படித்த வெங்கடராமனுடைய மகன். என் அப்பா தான் உங்களிடம் அனுப்பினார். எனக்கு நெஞ்சு வலி" என்றான். "மிகவும் சந்தோஷம். உங்கள் தந்தை எனது பால்ய சிநேகிதன் . சரி... நீ போய் ஒரு எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு நாளைக்கு வா" என்றார்..

இவனும் போனான். எக்ஸ்ரே எடுத்துக் கொண்டான். மறு நாள் டாக்டரிடம் போனான். அவரும் பார்த்தார். அவருக்கு நினைவு வரவில்லை. பேசாமல் இருந்தார் "டாக்டர்! நான் நேற்று வந்தேன். நீங்கள் தானே எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு வரச் சொன்னீர்கள்." என்றான். "அப்படியா சொன்னேன் சரி படத்தைக் கொடு பார்க்கலாம்" என்று வாங்கினார். எக்ஸ்ரே படத்தை வாங்கி வெளிச்சத்தில் உற்றுப்பார்த்தார் எலும்புக்கூடு தெளிவாகத் தெரிந்தது. அதன் பின் தான் அவருக்கு ஞாபகம் வந்தது. " அடடே! நீ வெங்கட்ராமன் பிள்ளையா வாவா வந்து உட்கார்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# யுத்த சூழ்நிலையில் காணாமல் போனோரின் உயிர்களுக்கு அரசாங்கமே பொறுப்பு

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

யுத்த சூழ்நிலையில் இராணுவத்தினரால் கைதாகி காணாமல் போனவர்களின் உயிர்களுக்கு அரசாங்கமே பொறுப்பு ஏற்க வேண்டும் என கொழும்பு உயர்நீதிமன்றம் தீர்பளித்துள்ளது.

திருகோணமலை லிங்கநகரில் 1994 ஆம் ஆண்டு யூன் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற சுற்றி வளைப்புத் தேடுதலின் போது இராணுவத்தினரால் கைதாகி காணாமல் போன கணபதிப்பிள்ளை மகேந்திரராஜா மற்றும் அவரது சகோதரர் கணபதிப்பிள்ளை ஜேசுதாசன் ஆகியோர் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையின் போதே உயர் நீதிமனற நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க இந்த தீர்ப்பை அறிவித்துள்ளார்.

காணாமல் போனவர்களின் தந்தையான எம்.கணபதிப்பிள்ளை இதுதொடர்பாக தாக்கல் செய்துள்ள மனுவில் தனது பிள்ளைகள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளமையால் உயிர் வாழும் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுவை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் யுத்த சூழ்நிலையில் கைதாகிக் காணாமல் போனவர்களுக்கரிய பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும் எனத் தீர்ப்பளித்துள்ளனர்.

இந்நிலையில், காணாமல் போன சம்பவம் இடம்பெற்று 14 வருடங்களுக்கு மேல் கடந்து போனமையால இதனை அடிப்படை மனித உரிமை மீறல் எனக் கூறமுடியது எனவும் அப்படியான மனுக்களை தாக்கல் செய்வதானால் ஒருமாத காலத்திற்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும் எனவும் அரச சட்டவாதி வாதிட்டு இந்த மனுவை நிராகரிக்குமாறு கோரினார. இதற்கு பதிலளித்த நீதியரசர் ராஜா பெர்னாண்டோ யுத்த சூழ்நிலையில் பல குறைபாடுகள் இருந்திருக்கலாம்.

ஆனால் அதற்காக இந்த குறிப்பிட்ட சம்பவங்கள் உண்மையல்ல எனக் கருத முடியாது என கூறி அரச சட்டவாதியின் கோரிக்கையை நிராகரித்தார்.

அடிப்படை மனித் உரிமை மீறல்கள் சட்ட பூர்வமாக இருந்தாலும் இராணுவத்தினால் கைதாகிக் காணாமல் போனவர்களுக்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும் என்ற நீதிமன்றத் தீர்ப்பைச் சுட்டிக் காட்டி பிரதிவாதிகளான திருகோணமலை பிளான்டன் பொயின்ட இராணுவக் கட்டளை அதிகாரியை எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதிக்கு முன்னதாக பதில் மனுத் தாக்கல் செய்ய அவகாசம் வழங்கி விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.உயர் நீதிமன்றத்தின் இந்தத் தர்மானம இலங்கை நீதித்துறை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

ஏற்கனவே இப்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள பல வழக்குகளுக்கு இந்தத் தீர்மானம் சாதகமானதாக அமையலாம் என்றும் கருதப்படுகின்றது. (ற)

## தமிழக மீனவர்கள் தாக்கப்படும் விடயம்

# இந்தியக் கடற்படைத் தளபதியின் கருத்துக்களுக்கு வை.கோ.கண்டனம்

(சென்னை)

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதில்லை எனவும், விடுதலைப் புலிகளே இவர்கள் மீது தாக்குதல் நடாத்துவதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும் இலங்கைக்கான விஜயத்தின் போது இந்தியக் கடற்படைத் தளபதி தெரிவித்துள்ள கருத்துக்கள் இந்திய அரசின் கொள்கைகளுக்கு மாறுபட்டதாகவும், நாட்டிற்குப் பாதகம் ஏற்படுத்துவதாகவும் உள்ளதாக ம.திமு.க பொதுச் செயலாளர் வை.கோ. கண்டித்துள்ளார்.

இந்தியக் கடற்படைத் தளபதி அருண் பிரகாஷ் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி இந்தியப் பிரதமரிடம் வை.கோ. மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளார்.

மேற்படி மகஜரில், தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து கடற்படைத் தளபதி தெரிவித்திருக்கும் கருத்துக்கள் இந்திய அரசின் கொள்கைகளுக்கு மாறுபட்டவை. இது குறித்து மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த 30 ஆண்டு காலத்தில் சுமார் 900ற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர். படகுகள் பல அழிக்கப்பட்டன. ஏராளமான மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அத்துடன் தமிழக மீனவர்கள் பலர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் குறித்து பலமுறை இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இது தவிர, இச் சம்பவங்கள் குறித்து நான் கண்டித்துப் பேசியும் இருக்கிறேன். உண்மை நிலை இவ்வாறிருக்க கடற்படைத் தளபதி அருண் பிரகாஷ் மாறுபட்ட கருத்தைத் தற்போது வெளியிட்டிருக்கி றார்.

இந்திய அரசின் கொள்கைகளுக்கு மாறான கருத்துக்கள் வெளியிடப்பட்டமை குறித்து விசாரணை நடாத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது (ற)

## இராசி பலன்

**24.09.2004 (புரட்டாதி 08வெள்ளிக்கிழமை)**

**ஏகாதசி பி.இ. 1.16 மணிவரை**

**உத்தராடம் மு.ப. 8.45 மணிவரை**

**இராகு காலம் 10.32-12.02 மணிவரை**

**சுப நேரம் 6.02- 7.32 மணிவரை**

**பரிவர்த்தன ஏகாதசி**

**மேடம்**
அதிகாரம், பிறருக்கு உதவுதல், எடுத்தகாரியம் கைகூடும், தெய்வதரிசனம்.

**இடபம்**
சரீரப்பிரயாசை, எதிர்பாராத செலவு, தேசாந்திர வாசம், காரிய தாமதம்.

**மிதுனம்**
பிரயாண தடங்கல், தர்மம், முழங்கால்வலி, பொருள் விரயம்.

**கடகம்**
தெய்வதரிசனம், தேகநலன், கீர்த்தி, தொழில் வருமானம்.

**சிங்கம்**
தொழிலில் ஆர்வம், போசன நன்மை, ஆரோக்கியம், மனமகிழ்ச்சி.

**கன்னி**
அஜீரணரோகம், காரியதாமதம், மனக்கவலை, பணத் தட்டுப்பாடு.

**துலாம்**
தன்னம்பிக்கைக்குறைவு, தனவிரயம், தொழில் சிந்தை, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
மனோதைரியம், புகழ்,காரிய அனுகூலம், உறவினர் சந்திப்பு.

**தனுசு**
மனோசங்கடம், மாதர் நட்பு, முயற்சி தாமதம், போசன சுகக்குறைவு.

**மகரம்**
தெய்வதரிசனம், வெகுமானம், நல்ல வரவேற்பு, ப்திய திட்டம்.

**கும்பம்**
சோம்பல் நிலை, காரிய அலைச்சல், பிரயாணம், பண விரயம்.

**மீனம்**
பெருமையடைதல், எடுத்தகருமங்களை கைகூடும், தெய்வசிந்தை ,போசன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது) **வளவன்**

# அத்தியாவசியப் பொருட்களின் விலை தொடர்ந்தும் அதிகரிக்கும்?

(கொழும்பு)

இலங்கையில் வெளிவரும் பலவகைப் பால்மாக்கள், பாற்பொருட்கள், மண்ணெண்ணெய், எரிபொருட்கள் போன்ற பல அத்தியாவசியப் பொருட்கள் உட்பட பலவித உணவுப் பொருட்களின் விலை தொடர்ந்து அதிகரித்துச் செல்வதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மலிபன், மில்குரோ, அங்கர், கெரிகோல்ட், லா∴ப்ஸ் காஸ் போன்ற பல உற்பத்தி நிறுவனங்கள் இத்தகைய தங்களது உற்பத்திப் பொருட்களின் விலையதிகரிப்பை அறிவித்துள்ளன.

மிக விரைவில் பிஸ்கட் வகைகள், றஸ்க் மற்றும் பாண் வகையறாக்களின் விலையும் இன்னும் அதிகரிக்கலாம் என்று தெரியவருகிறது.

இதேவேளை, கோதுமை மாவின் விலையும் இன்னும் இரு தினங்களுக்குள் அதிகரிக்கப்படும் என வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்று வரும் ஹர்த்தால் நடவடிக்கையே இதற்குக் காரணம் என அவர் மேலும் குறிப்பிட்டார். (க-61)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல: 19



## சுவையான ஒரு நிகழ்ச்சி

நான் ஒரு சமயம் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். ஒருவன் ஒரு சிறியதுண்டு பத்திரிகை என்னிடம் கொடுத்து, "நாங்கள் வடலூர் திருப்பணி செய்து கொண்டி ருக்கிறோம். வாரியார் சுவாமிகளின் ஆக்ஞையின் பேரில் நாங்கள் இதில் ஈடுபட்டிருக்கிறோம். நீங்கள் ஏதாவது பெரிய அளவில் உதவி செய்யுங்கள்'' என்று கேட்டான். நான் சிரிக்காமலேயே ''ரொம்ப நல்லது. வாரியார் சுவாமிகள் இப்பொழுது எங்கேயிருக்கிறார்?'' என்று கேட்டேன். அதற்கு அவன் ''வாரியார் சுவாமிகள் தினம் ஒரு ஊராகச் சுற்றிக் கொண்டிருக்கிறார். நாங்கள் அவருடைய ஆட்கள்தான்'' அதனால் அவன் நான்தான் வாரியார் என்பதை உணர்ந்து மெள்ள நழுவிப் போய்விட்டான். உலகிலே இப்படியும் ஏமாற்று வித்தைகள் நடக்கின்றன.

## வள்ளலாரைக் கண்ட அம்மையார்

வடலூரில் சத்தியஞான சபைத் திருப்பணி தொடக்கத்தல் ஒருநாள், சத்தியஞான சபையின் அர்ச்சகர் திரு பாலசுப்பிர மணய சிவாச்சாரியார் அவர்களின் இல்லத்திற்கு உணவு அருந் தச் சென்றிருந்தேன். பாலசுப்பிரமண்ய சிவாச்சாரியார் நேர்மையும் தூய்மையும் உடை யவர். வள்ளலாரின் சீடராகிய சபாபதி சிவாச்சாரியாரின் பேரன்.

இவருடைய தாயார் நடையில் அமர்ந்திருந்தார். நான் அவரை வணங்கி அவர் அருகில் அமாந்தேன். "பெரியம்மா! வணக்கம். தாங்கள் ராமலிங்க அடிகளாரைப் பார்த்திருக்கிறீகளா?" என்று மிகுந்த ஆவலுடன் கேட்டேன். அவர் சிரித்தமுகத்துடன் "ஐயா! அப்பொழுது எனக்கு ஐந்தரை வயது நிரம்பியிருந்தது. எங்கள் தாத்தா ஆடூர் சபாபதி சிவாசசாரியார் அவர்களைக் காண சந்நிதானம் வருவார்! என்னுடைய இரு தோள களையும் பிடித்து "குட்டிப் பெண்ணே! குட்டிப் பெண்ணே!" என்று கூப்பிட்டுக கொஞ்சி விளையாடுவார். அப்பொழுது அவருடைய திருமேனியில் பச்சைக் கற்பூர வாசனை வீசும். அவருடைய சிரத்தில் உள்ள முக்காடு விலகும்பொழுது மின்னலைப் போன்ற ஞான ஒளி வீசும். அப்பொழுது சந்நிதானம் தலையிலுள்ள முக்காட்டுத் துணியை இழுத்து மறைத்துக் கொள்வார்." என்று கூறினார். இந்த அற்புதமான திருமொழிகளைக் கேட்டு நான் அளவற்ற மகிழ்ச்சியும், அதிசயமும் அடைந்தேன்.

## ஆரல்வாய்மொழி மாநாடு

கனயாகுமரி மாவட்டத்திலுள்ள ஆரல்வாய்மொழி என்ற ஊரில் டாக்டர் நடராஜன் அவர்கள் ஒரு மாநாடு நடத்தினர். இந்த மாநாட்டுக்கு டெல்லிபில் அமைச்சராக இருந்த கைலாசநாதர் கட்ஜ் அவர்கள் தலைமை தாங்கினார். அப்பொழுது காருக்குறிச்சி அருணாசலம் அவர்கள் நாதஸ்வரம் வாசித்தார். ஷண்முகப்பிரியா என்ற ராகத்தில் காதில் தேனாறு பாய்வது போன்ற அவருக்கென்றே உள்ள தனிப் பாணியில் இனிய நாதத்தைப் பாய்ச்சினார். மதுரை திருஞானசம்பந்த மடாலயம் மகா சந்நிதானம் திருப் பெருத் திரு சோமசுந்தர தேசிக பராமாச்சாரியர் ஆசியுரை வழங்கினார். நான் விரி வுரை புரியலானேன். சபையில் பலப்பல அறிஞர்கள், டாக்டர்கள், வழக்கறிஞர் கள், அரசியல் தலைவர்கள் முதலிய பலர் கூடியிருந்தார்கள். இந்த சபை இந்திர சபை போல் பொலிவுடன் விளங்கியது.

நான் தென்னாட்டின் சிறப்பைக் கூறலானேன். தென்னாடு பொன்னாட்டினும் மேலானது. எநநாட்டினும் உயர்ந்தது. நால்வர்களும், ஆழ்வார்களும் தென்னாட்டிலே தான் அவதரித் தார்கள். பட்டினத்தார், திருமூலர், தாயுமானவர், அருணகிரிநாதர், ராமலிங்க அடிகளார் முதலிய ஞானிகள் பலர் இங்குதான் தோன்றினார்கள். அன்றியும் சுத்தாத்வைத குருநாத ராம் மெய்கண்டாரும் விசிஷ்டாத்வைத குருநாதராம் ராமனுஜரும், அத்வைத குருநாதராம் சங்கரரும், த்வைத குருநாதராம் மத்வாசாரியரும் தென்னாட்டில் தான் தோன்றினார்கள். சேக்கிழார், ஒட்டக்கூத்தர், கம்பநாடர், புகழேந்தி, இரட்டைப் புலவர்கள், படிககாசு முதலிய புலவர் பெருமக்களும் இத்தென்னாட்டிலேயே தோன்றினார்கள்.

திருமாலின் திருத்தலங்களாகிய 108திருப்பதிகளும், சிவமூர்த்தியின் திருத்தலங்களாகிய 1008 சிவஸ்தலங்களும், ஆறுபடை வீடுகளும் தென்னாட்டிலே தான் விளங்குகின்றன.

வடக்கே ஒரே ஒரு மகாத்மா தோன்றினார். அவரை வைத்து வாழாமல் சுட்டுக் கொன்று விட்டார்கள்.

வங்கத்திலே பிறந்த வேதாந்த சிங்கமாகிய விவேகானந்தருக்கும் கன்யா குமரிப் பாறையிலேதான் ஞானோதயம் உண்டாயிற்று. வடக்கே தைரியம் உண்டு. தெற்கே ஞானம் உண்டு. இத்தகைய பல பெருமைகள் தென்னகத்திற்கு உண்டு.

சிலர் கேட்கலாம்-வடக்கே தானே நிலப்பரப்பு விசாலமாக இருக்கின்றது. தெற்கே நிலம் குறுகி இருக்கின்றது. அதனால் தென்னாடு குறுகிய நாடு என்ற ஒரு வினாவை எழுப்புவார்கள். விசாலமாக இருப்பதனால் ஒரு பகுதிக்குப் பெருமையும், குறுகியிருப்பதனால் ஒரு பகுதிக்குச் சிறுமையும் உண்டாக மாட்டாது. சௌளம் செய்கின்ற கத்திக்கும், இளநீர் வெட்டுகின்ற கத்திக்கும் பின் பக்கம் விசாலமாக இருக்கும். முன் பக்கம் கூராக இருக்கும். கத்தியின் விசாலமான பகுதியா வேலை செய்யும்? கூரான பகுதிதானே வேலைசெய்யும்! என்று கத்தியின் உதாரணத்தைக கத்திச் சொன்னேன். அப்பொழுது தொலைவில் கரகோஷத்துடன் பலத்த ஆரவாரம் எழுந்தது.

மாநாடு முடிந்தவுடன் திருவிதாங்கூர் மன்னர் பெருமான் என்னையும்; மதுரை மகாசந்நிதானத்தையும் நாளை 3மணிக்கு அரண்மனைக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதுபடியே அடுத்த நாள் மாலை 3மணிக்கு மதுரை மகாசந்நிதானத்துடன் திருவனந்தபுரம் அரண்மனைக்குச் சென்றேன். மன்னர் பெருமான் வர வேறறு எங்கள் இருவருக்கும் பொன்னாடை போர்த்தி உபசரித்தார். மன்னர் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே நேற்றுத் தாங்கள் மாநாட்டில் வடநாட்டைக் குறைத தும், தென்னாட்டை உயர்த்தியும் பேசினீர்கள். மாநாட்டிற்கு கைலாசநாத கட்ஜ் தலைமை தாங்கியிருக்கிறாரே! வடநாட்டை குறைத்துப் பேசினால் அவர் மனம் வருந்துவாரே! என்று எண்ணி நான் அஞ்சினேன். தாங்கள் கத்தி உதாரணம் சென்னதைக் கேட்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். கத்தியின் கூரான பகுதி தான் வேலைசெய்யும் என்ற நயமான விளக்கவுரையை என் ஆயுள் முடியும் வரை மறக்க மாட்டேன் என்று கூறிப் பாராட்டினார்.

திருவிதாங்கூர் மன்னர் பெருமானுடைய பணிவு, அன்பு, அடக்கம் ஆகிய குணங் கள் என் உள்ளத்தை உருக்கின.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## தீவுப் பகுதிகளுக்கு நீர்விநியோகம்

(கோண்டாவில்)

காரைநகர், வேலணை உள்ளிட்ட பகுதிகளுக்கு குழாய் நீர் விநியோகம் கிடைக்கவுள்ளது.

இதற்கான துரித ஏற்பாடுகளைத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேற்கொண்டு வருகின்றது.

இப் பகுதிகளில் மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் வழங்கி, குழாய் நீர்விநியோகத் திட்டத்துக்கு உதவமுடியுமென்று இலங்கை மின்சார சபை உயரதிகாரி ஒருவர் உறுதியளித்துள்ளார். (ந-130)

## சிவதீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை வருடந்தோறும் ஐப்பசி மாதத்தில் சைவர்களுக்கு ஒழுங்குபடுத்தி வழங்கிவரும் சிவதீட்சை இம்முறையும் வழங்கப்படவுள்ளது.

என்வே, யாழ்.குடாநாட்டிலுள்ள பாடசாலை மாணவர்கள் , பொது மன்ற உறுப்பினர்கள் மற்றும் சைவர்கள் அனைவரும் தீட்சை பெற விரும்பின் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு சபையின் செயலாளர் கேட்டுள்ளார். (ந)

## ஒருநாள் தியானம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.மறைமாவட்ட புனித மரியாயின் சேனையின் வருடாநத ஒருநாள் தியானம் (ஞான ஒடுக்கம்) நாளை சனிக்கிழமை காலை 9.00மணிக்கு ஆத்மீக இயக்குநா அருள்தந்தை றெஜி இராஜேஸ்வரன அடிகள்-கொமிசியத தலைவி சகோதரி வைலற் இம்மானுவேல் ஆகியோர் தலைமையில் யாழ். புனித மரியாள் பேராலயததில் நடைபெறவுள்ளது. (ந)

## புனரமைக்க நடவடிக்கை

(கோண்டாவில்)

கடந்த போர் அனர்த்தங்களினால் சேதமடைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் கைதடி பனைவள ஆராய்ச்சி நிலையத்தை மீண்டும் புனரமைத்து இயக்க செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் செயலகத்தல யாழ்.தேர்தல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இது விடயம் குறித்து ஆராயப்பட்டுள்ளது. இதனையடுத்து கைதடி பனை வள ஆராய்ச்சி நிலையத்தைப் புனரமைப்பதற்கான வேலைத திட்டங்களை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் உறுதியளித்துள்ளதாகத் தெரிய வருகிறது. (ந-130)

## *விபத்தில் வயோதிப மாது மரணம்*

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கள விபத்தல் வேலாயுதபிள்ளை கனகம்மா (வயது 65)என்பவர் மரணம் அடைந்துள்ளார். விபத்துக்குக் காரணமானவர்கள் மோட்டார் சைக்கிளை அவ்வடத்தில் விட்டு விட்டு தப்பி யோடிவிட்டனர்.

இருந்தாலும் விபத்து நடந்த இடத்துக்கு அருகில் இருந்தவர்கள் கொடுத்த தகவல்படி குறித்த நபர்களை கடந்த திங்கட்கிழமை கைது செய்த பொலிஸார் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.நீதிவான் ஆர்.ரீ.விக்னராஜா இவர்களை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும்,குறித்த மோட்டார் சைக்கிளை உத்தரவின்றி உரியவாடம் ஒப்படைக்க வேண்டாம என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளார். (க-5,19)

## மஹோற்சவம்

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வாா தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றததுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை தேர்த்திருவிழாவும், 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சமுத்திரத் தீர்த்தத் திருவிாவும், 29ஆம் திகதி புதன் கிழமை கேணித்தீர்த்தமும் இடம்பெறவுள்ளன.

இதனையொட்டி பருத்தித்துறை, டிப்போ விஷேட பஸ் சேவையை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ந-35)

## இலவச கண் பரிசோதனை

(மானிப்பாய்)

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச கண்பரிசோதனை முகாமும் மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 26 ஆம திகதி காலை 9மணிக்கு சங்கானை அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் வாழும் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களின் நலனைக் கவனத்தில் கொண்டே இந்த இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும் இடம்பெறவுள்ளது.

(ப-20)

## அமெரிக்க குழு யாழ்.விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்க உயர்ஸ்தானிகராலய பிரதி தலைமையிலான குழு ஒன்று கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளது.

இக்குழுவினர் பலாலியில் நேற்று படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

இன்று முழுநாளும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அவர்கள் குடாநாட்டிலுள்ள அமெரிக்கப் பிரஜைகளைச் சந்தித்து கலந்துரையாடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

(த-43)

## *இராணுவ வாகன விபத்தில் ஓட்டோ சாரதி காயம்*

(சண்டிலிப்பாய்)

காங்கேசன்துறை வீதியில் இராணுவ வாகனம் ஒன்று ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானதால் ஓட்டோவை ஓட்டிவந்தவர் படுகாயமடைந்தார்.

கடந்த திங்கட்கிழமை நண்பகல் இணுவிலை அண்மித்த பகுதியில் இடம்பெற்ற இவ் விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த றஜீப் என்பவரே காயமடைந்துள்ளார்.

ஓட்டோவில் பயணித்த ஏனையோர் காயங்கள் எதுவுமின்றி தப்பிக் கொண்டனர்.

(ப-22)

## ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் ஆத்மீக சஞ்சிகையான ஞானசசுடர் புரட்டாதி மாத இதழ இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30மணிக்கு வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை சிவஸ்ரீ சோ.தண்டபாணி தேசிகர் ஜே.பி. நிகழ்துவார். மதிப்புரையை இளைப்பாறிய அதிபர் சைவப் புலவர் சு.செல்லத்துரை வழங்குவார்.

(ந-35)

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர் - குறள்

வலம்புரி

## மகாநாயக்கரை தடுப்பது எதற்காக...?

மல்வத்தபீட மகாநாயக்கர் அதிசங்கைக்குரிய சிம்பத்துவ ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர், விடுதலைப் புலி உறுப்பினர்களை சந்திக்கக் கூடாதென தென்னிலங்கை சமாதான ஒருங்கிணைப்பு அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

மல்வத்தபீட மகாநாயக்கர் வன்னிப் பெருநிலப் பரப்புக்குச் சென்று விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களை சந்திப்பதற்கு தயாராக இருந்தார். சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் மகாநாயக்கரின் வன்னி விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், மல்வத்தபீட மகாநாயக்கர் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலி உறுப்பினர்களை சந்திப்பது புலிகளை ஆதரித்தவர்களுக்கு சாதகமாகிவிடும் என்ற கருத்தை முன்வைத்து, தென்னிலங்கை சமாதான ஒருங்கிணைப்பு அமைப்பு மகாநாயக்கருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அக் கடிதத்திலேயே வன்னி சென்று விடுதலைப் புலிகளை சந்திப்பதை தவிர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

"சமாதானம்" என்ற பேரில் இயங்குகின்ற ஓர் அமைப்பு சமாதானத்திற்கு எதிராகச் செயற்படுவதென்பது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

மல்வத்தபீட மகாநாயக்கர் வன்னி சென்று விடுதலைப் புலிகளை சந்திப்பதானது, விடுதலைப் புலிகளை ஆதரித்தவர்களை அல்லது விடுதலைப் புலிகளின் வன்செயலின் போது மௌனம் சாதித்தவர்களை பெரும் உற்சாகப்படுத்தும் என குறித்த சமாதான அமைப்பு கூறுவது இனப்பிரச்சினை குறித்த வரலாற்றுப் பாதையை புரிந்து கொள்ளாமை ஆகும்.

ஒரு காலத்தில் விடுதலைப் புலி ஆதரவாளர்கள் என்று கூறி அப்பாவித் தமிழ் இளைஞர், யுவதிகளைக் கைது செய்த இலங்கைப் படையினர் இன்று விடுதலைப் புலி உறுப்பினர்களை சந்தித்துப் பேச்சு நடத்துகின்றனர்.

இவ்வாறு நிலைமை மாறிப்போயுள்ளமைக்கு காரணம் இலங்கைப் படையினரின் மனமாற்றம் அன்று. மாறாக விடுதலைப் புலிகள் தமது உயிரைத் தியாகம் செய்து நடத்திய பெரும் தாக்குதல் நடவடிக்கையாகும்.

விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமலே இலங்கை அரசும், படைகளும் விடுதலைப் புலிகளுடன் இணங்கிப் போவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தன.

அதன் நிமித்தமே அரசு - புலிகள் உடன்படிக்கை கைச்சாத்தாகியது. இதனைப் புரிந்து கொள்ளாத தென்னிலங்கை சமாதான ஒருங்கிணைப்பு அமைப்பு தவறான தகவல்களை, காரணங்களை முன்வைப்பது இந்த நாட்டில் மீண்டும் ஓர் யுத்தத்தை ஏற்படுத்துவதற்காகவே என்பதை சிங்கள மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதில் தடையாக இருப்பவர்கள் பௌத்த தேரர்கள் என்ற எண்ணம் தமிழ் மக்களின் மத்தியில் மிக நீண்டகாலமாக பதிந்துபோயுள்ளது.

இதற்கு பௌத்த தேரர்களின் நடவடிக்கைகள், பிரசாரங்கள் போன்றவை காரணமாக இருந்தன. இந் நிலையில் பௌத்த தேரர்கள் சமாதானத்தில் கொண்டுள்ள விருப்பப்பாட்டை வெளிப்படுத்துவதாயின் அதற்கான ஒரே வழி பௌத்த மகாநாயக்கர்கள் விடுதலைப் புலிகளை சந்திப்பதே ஆகும்.

இதற்கு மேலாக விடுதலைப் புலிகள் குறித்தோ, தமிழ் மக்கள் குறித்தோ ஓர் தவறான எண்ணப்பாட்டை பௌத்த பீடத்தினரும் கொண்டுள்ளனர்.

இவ்வாறு தமிழினம் குறித்த தவறான கருத்து நிலை பௌத்த பிக்குகளிடம் இருக்கும்வரை சமாதானம் என்பது சாத்தியப்படுவது கடினமே.

எனவே பௌத்த பீடத்தினரின் தவறான எண்ணப்பாடும் களையப்படவேண்டும். அதற்கும் மகாநாயக்கர்கள் - விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்புக்கள் தேவையானதே ஆகும்.

இதனைப் புரிந்துகொள்ளாத சமாதான அமைப்பு மகாநாயக்கரின் வன்னி விஜயத்தை தடுப்பது நீதியானதன்று.

# இடைக்கால நிர்வாக வரைபு நாட்டைப் பிரிக்கும் திட்டம் அல்ல

## வணபிதா ஜெயக்குமார் அடிகள் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபு இந்த நாட்டைப் பிரிப்பதற்கான யோசனை அல்ல. ஏற்கனவே பிரிந்த நிலையிலுள்ள நாட்டை ஒற்றுமைபடுத்துவதற்கான யோசனையேயாகும். எனவே இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபு குறித்து தென்பகுதி மக்கள் அச்சம் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இவ்வாறு யாழ்ப்பாணம் மனித முன்னேற்ற நடு நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வணபிதா சீ.ஜீ. ஜெயக்குமார் அடிகள் குருநாகல் மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த தேவசரண நிலைய உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின இணையத்தில் அதன் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது தேவசரண நிலையத்தின் 60 உறுப்பினர்கள் அதன் பணிப்பாளர் திருமதி ரஞ்ஜினி மொறகொட தலைமையில் பங்கு கொண்டிருந்தனர்.

வணபிதா. ஜெயக்குமார் அடிகள் அங்கு தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

இப்போது நடைமுறையில் நாடு இரண்டாகவே இருக்கின்றது. உலகில் இங்கு மட்டும் தான் இரண்டு இராணுவமும் இரண்டு பொலிஸும் இருக்கின்றன. பிளவுபட்ட நிலையில் இருக்கும் நாட்டினை ஒற்றுமைப்படுத்தி ஐக்கியமாக்க வேண்டும். அதற்காகவே தான் இடைக்கால நிர்வாகசபைத் திட்டவரைபு கொண்டு வரப்பட்டது. இதன் உண்மைத் தன்மையை அறியாது இதுபற்றிய தப்பான எண்ணம் தென்பகுதி மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நாம் சிங்கள மக்களுக்கு எக்காரணம் கொண்டும் எதிரானவர்கள் அல்லர். சிங்கள மக்களுடன் சாந்தியுடனும் சமாதானத்துடனும் ஐக்கியமாக வாழவே விரும்புகின்றோம். நாம் சிங்கள மக்களை எக்கட்டத்திலும் எங்கும் தாக்கவில்லை. எனினும் சிங்களப் பேரினவாத அரசாங்கம் பௌத்த மதத்துக்கு மட்டும் கொடுத்து வரும் அரச அங்கீகாரததினை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நிலையில் நாட்டில் இருக்கக் கூடிய இந்து- முஸ்லிம்- கிறிஸ்தவ மதங்களையும் அரசாங்கம் ஏற்று அங்கீகரிக்க வேண்டும் என்பது எமது நீண்ட காலக் கோரிக்கையாகும். நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு இனத்தின் மத, மொழி உரிமைகள் மதிக்கப்பட வேண்டும், பேணப்பட வேண்டும்.எமது இத்தகைய நிலைப்பாட்டை தேவசரண நிலையம் தென்பகுதிக்கு எடுத்துச் சென்று கூற வேண்டும் எனக் கூறினார்.

இதேசமயம் தேவசரண நிலையத்தின் பணிப்பாளர் திருமதி ரஞ்சினி மொறக்கொட அங்கு தெரிவிக்கும் போது.

நாம் யாழ்ப்பாணத்தைப் பார்வையிட்டு மிகவும் வேதனைப்பட்டுள்ளோம். இடிந்த கட்டடங்கள், வீடுகள், பாலங்கள் மற்றும் வீதிகள் போன்றவற்றினைப் பார்வையிட்டபோது இருபது வருட கால யுத்தம் எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை தெளிவாக அறியமுடிகின்றது. நாட்டின் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்படவேண்டும் என்பதையே சிங்கள மக்களும் விரும்புகின்றனர். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துப்பாகிகளைத் தூக்குவது தீர்வாகாது என்றார். (ந-16)

## சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

2005ஆம் ஆண்டிற்கான சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர் தேர்வுகளுக்குகான விண்ணப்பங்கள் சைவப்புலவர் சங்கத்தினால் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணபப்படிவங்களை சைவப்புலவர் சங்கததில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் இளஞ்சைவப் புலவர் பரீட்சையிலும், பட்டதாரிகள் /இளஞ்சைவப்புலவர் / சைவசித்தாந்த பண்டிதர் சைவப்புலவர் பரீட்சையிலும் தோற்ற முடியும்.

இப்பரீட்சைகள் எதிர்வரும் 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் நடைபெறும்.தேசியக் கல்வியியற் கல்லூரியில் இந்துசமயக் கற்கைநெறியினைக் கற்பதற்கு விரும்பும் மாணவர்களில் இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் தேர்வுகளில் சித்தி பெற்று பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

2005ஆம் ஆண்டு நடைபெறவிருக்கின்ற இவ் இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்களுக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாத பிற் பகுதியில் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் பிரதி சனி,ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9முதல் 12மணி வரை இலவச வகுப்புக்கள் நடாத்துவதற்கு சைவப்புலவர் சங்கத்தினால் ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன. (ந-19)

## கையெழுத்து வேட்டைக்கு தயாராகிறது ஹெல உறுமய

(கொழும்பு)

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து பத்து இலட்சம் பேரிடம் கையெழுத்துக்களைப் பெற்று மகஜர் ஒன்றை ஜனாதிபதியிடம் கையளிக்க ஜாதிக ஹெல உறுமய தயாராகி வருகின்றது.

நோர்வே அரசாங்கத்துடனான இராஜதந்திர உறவுகளை நிறுத்த வேண்டும் .வடக்கு-கிழக்கைத் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கவேண்டும், சங்கைக்குரிய ஹங்கொடவள சோமதேரரின் இறப்பில் உள்ள மர்மத்தை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவை இயங்க வைக்க வேண்டும் .

விடுதலைப்புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை நிராகரிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன் வைத்தே கையெழுத்து வேட்டை நடாத்தப்படவுள்ளது.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இந்த முடிவை ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் சங்கைக்குரிய மேதானந்ததேரர் தெரிவித்துள்ளார். (ந-8)

## நாட்டின் சமாதான நடவடிக்கைகள் குறித்த தெளிவான நிலைப்பாடு அரசிற்கு இல்லை

### ஐ.தே.க. எம்.பி. ஜீ.எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக அரசாங்கத்திற்கு தெளிவான நிலைப்பாடு இல்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள கட்சிகள் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதா? இல்லையா? என்ற முடிவெதனையும் எடுக்க முடியாத நிலையில் தடுமாறுகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக சபை குறித்து சமாதானப் பேச்சுவார்த்தையில் புலிகளுடன் பேசுவதா? இல்லையா? என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருக்கின்றது.

எனவே அரசாங்கமும் அரசாங்கத்துடன் இணைந்துள்ள கூட்டுக்கட்சிகளும் சமாதான நடவடிக்கைகள் குறித்த தமது தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்றார்.

இதேவேளை, அரசாங்கம் பதவிக்கு வரும் போது 40 வீதமான சம்பள உயர்வு வழங்குவதாக அளித்த வாக்குறுதியை இன்னும் நிறைவேற்றவில்லை.இதனால் இதற்கு எதிராக இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுளளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-61)

## கெக்கிராவையில் ஆயுதங்கள் மீட்பு

(அனுராதபுரம்)

அனுராதபுரம் மாவட்டம் கெக்கிராவையிலுள்ள மலசலகூட குழியொன்றிலிருந்து நேற்று முன்தினம் மாலை ஒரு தொகுதி ஆயுதங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி மலசலகூடக் குழியிலிருந்து 81 எம்.எம் மோட்டார் நான்கு, 61எம்.எம்.மோட்டார் நான்கு மற்றும் ஒரு கிரனைட் ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

இவை பாவனைக்குதவாத நிலையில் காணப்பட்டதாக கெக்கிராவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ந)

## ஈழ அகதிகள் ஐவர் மன்னார் வந்தனர்

(மன்னார்)

தமிழ்நாட்டிலிருநது 5 ஈழத்தமிழ் அகதிகள நேற்று முன்தினம் அதிகாலை மன்னாரை வந்தடைந்துள்ளனர். வேலூர் குளியாட்டம் சுப்பிரமணியபுரம் அகதிமுகாமிலிருந்தே இந்த அகதிகள் வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்களை மன்னார் மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்த போது நீதவான் அவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-8)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**கடமை என்பது நாம் எந்தச் சமூகத்தில் பிறந்தோமோ அந்தச் சமூகத்தின் இலட்சியத்திற்கும் பழக்க வழங்கங்களுக்கும் ஏற்ப நம்மை உயர்த்தவும் உன்னதப்படுத்தவும் செய்கின்ற வேலைகளே என்பதை அறியலாம்.**

சுவாமி விவேகானந்தர்

# கருணாவின் சகோதரர்...

னேசதுரை கருணாவின் மூத்த சகோதரன். இவர் ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்த தனது சகோதரன் கருணா நீக்கப்பட்டதையடுத்து அவருடன் இணைந்துகொண்டார். மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணாவின் சார்பிலான முக்கிய செயற்பாட்டாளராக இருந்த இவர், தமிழ்த் தேசியப் படை என்ற பெயரில் இராணுவ துணைப்படை

## கூட்டமைப்பு...

உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 11 ஆம் திகதி கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எட்டுப் பேர் மல்வத்த அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இக் கலந்துரையாடலின்போது இனப்பிரச்சினை தீர்வுக்கான வழிகள் குறித்துக் கலந்துரையாடப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கூட்டமைப்பின் சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிரர்ஜா, எம்.கே. சிவாஜிலிங்கம், இரா.சம்பந்தன், விநோதரலிங்கம், கனகரட்ணம், கனகசபை, சிவநாதன் கிஷோர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

யாகச் செயல்பட்டதாகக் கூறப்படுகின்றது. மாதுருஓயாப் பிரதேச இராணுவ முகாமில் தங்கியிருந்த இவர்கள் முகாமிற்கு அருகிலான காட்டுப் பகுதிக்குள் வந்தபோதே தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகள் மீது அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சில தாக்குதல் சம்பவங்கள் இவரது வழிநடததலிலே இடம்பெற்றதாகவும், குறிப்பாக இவர் தலைமையிலான அறுவரே காயங்கேணி இராணுவ முகாமருகிலான தாக்குதல் மற்றும் புல்லுமலை எல்லைநிலை மீதான தாக்குதல் ஆகியவற்றில் இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து பங்கேற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து தனித்தியங்க கருணா முடிவெடுத்த பன்னர், கருணா அணி மீது கடந்த ஏப்ரல் மாதம் விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்தனர். இதன்போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக கருணாவின் தாக்குதல் அணியை ரெஜியே வழி நடத்தினார்.

விடுதலைப் புலிகளின் கடுமையான தாக்குதலையடுத்து ரெஜி தப்பியோடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# குடும்பஸ்தர் நேற்று அடித்துக் கொலை!

(துன்னாலை)

கரணவாய் கிழக்கு மணல் பகுதியில் குடும்பஸ்த்தர் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. குறிப்பிட்ட நபரை அழைத்து சென்ற மூவர் அடங்கிய குழுவினர் ஆட்கள் இல்லாத வீடு ஒன்றினுள் கையை பின்புறமாக கட்டிவைத்து சுத்தியல், காற்றுப்பம் என்பவற்றால் தலையில் தாக்கியுள்ளனர். இச்சம்பவத்தை அறிந்த பிரஸ்தாப குடும்பத்தாரின் உறவினர்கள் அங்கு சென்று உடனடியாகச் அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று அதிகாலை அவர் அங்கு மரணமானார். பருத்தித்துறை நீதிவான் அரியநாயகம் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். (ச-111,52,105)

## கௌரவிப்புவிழா

யாழ்.மாவட்ட விவசாய செய்கையில் ஈடுபடும் (சாதனை படைத்த) 80 விவசாயிகளுக்கு இன்று மு.ப. 10.45 மணிக்கு திருநெல்வேலி விவசாய பயிற்சி பாடசாலையில் பரிசில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

உதவி விவசாய பணிப்பாளர் க.சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க-127)

## எழுச்சிக் கருத்தரங்கு

லெப் கேணல் தியாகி திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு தென்மராட்சி அரசியற்துறையினரின் ஏற்பாட்டில் இன்று நண்பகல் 12மணிக்கு சாவச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் எழுச்சி கருத்தரங்கு ஒன்று நடைறெவுள்ளது. இதில் அனைவரும் கலந்துகொள்ளும்படி தென்மராட்சி அரசியல்துறை பொறுப்பாளர் செ.கலைவாணன்கேட்டுள்ளார். (க-127)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் ஆதரவில் யோகி கோம் சயன்ஸ் அக்கடமியினர் நாடாத்தும் கேக் அலங்கார கண்காட்சி இன்று ஆரம்பமாகவுள்ளது.

28 ஆம் திகதி செவ்வாய்கிழமைவரை நடைபெறும் இக்கண்காட்சியை மு.ப. 9 மணிமுதல் இரவு 7 மணிவரைக்கும் பார்வையாளர்கள் பார்வையிடலாம். (க)

## பல்கலைக்கழக...

இதேவேளை யாழ். பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் இன்று காலை 9 மணிக்கு ராமநாதன் மண்டபத்திற்கு முன்னால் ஒன்றுகூடுமாறு பல்கலைக்கழக ஊழியர்சங்கத் தலைவர் கேட்டுள்ளார். இன்று காலை நடைபெறவுள்ள கலந்துரையாடலைத் தொடர்ந்தே பல்கலைக்கழக ஊழியர்களின் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக அறிவிக்கப்படவுள்ளது. (ச)

## கருணாவின்...

லப்பட்டவர் ஆவார்.

நேற்று முன்தினம் இரவு வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட இவர் விடுதலைப் புலிகளால் விலக்கப்பட்ட கருணா அணியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது. (ம)

## திருமலை...

யினரின் உறவினர்களும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டுவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உண்ணாவிரதம் இருந்துவரும் படையினரின் பெற்றோர், உறவினர்களை அமைச்சர்களான மங்கள சமரவீர, மைத்திரிபால சிறிசேன மற்றும் பொலிஸ்மா அதிபர், மாகாண ஆளுநர் உட்பட பலர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். (க)

## ஈ.பி.டி.பியின்...

ரது மனைவி உட்பட இருவர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த இருவரும் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக வெள்ளவத்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். கடந்த 45 நாட்களுக்குள் ஈ.பி.டி.பியின் பிரதேச உறுப்பினர்கள் மூவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-08)

## கனடாவில்...

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவ் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

கனடாவின் ரொறன்டோ நகரில் நாளை சனிக்கிழமை மாபெரும் ஏற்பாடுகளுடன் பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


தென் இந்திய திருச்சபை- யாழ். அத்தியட்சாதீனம்

அத்தியட்சாதீன விழா – 2004

25-09-2004 - சனிக்கிழமை

மு.ப. 8.30 மணி – அருட்பொழிவு வழிபாடு
வண. D.S.சொலமன் – குரு அபிஷேகம்
சகோ. A.சவுந்திரராஜன் – உதவிக்குரு அபிஷேகம்
சகோ. P.தேவமித்திரன் – உதவிக்குரு அபிஷேகம்
இறைசெய்தி – அருட்திரு ஸ்மபன் கிறே
(இன்டியானாபொலிஸ், அமெரிக்கா)
வட்டுக்கோட்டை பேராலயம்
மு.ப. 11.00 மணி – தேநீர் வரவேற்புபசாரம்
மு.ப. 11.30 மணி – கலை நிகழ்ச்சிகள்
(ஒட்லி மண்டபம்)
பி.ப. 2.30 மணி – உதைபந்தாட்டம்
ஊழியர்கள் எதிர் பொது நிலையினர்

செயலாளர்
யாழ். ஆதீனம்.

(C/539)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



முப்பத்தோராண்டு
மகத்தான வங்கிச்
சேவையினை இனிதே
பூர்த்தி செய்து இன்று
(24.09.2004) ஓய்வுபெறும்

திரு.இ. மகேஸ்வரன் அவர்களை

சேவைநலன் பாராட்டி
வாழ்த்தி மகிழ்கின்றோம்

இலங்கை வங்கி,
மேற்றரக்கிளை
யாழ்ப்பாணம்.

பிரதான முகாமையாளரும்
சக ஊழியர்களும்

(8838)



19 வருடகால தனித்துவமான பயிற்சி நிலையம்

கலாலயா பயிற்சியகம்

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்) யாழ்ப்பாணம்
மகளிருக்கான துரித 3 மாத காலப் பயிற்சிகள்

கேக் ஐஸிங் – சகலவிதமான ஐஸிங் 22 வகையான கேக் அமைப்புக்கள் மாச்சீனி மலர்கள் (Sugar Crafting) என்பன வெகு சிக்கனமான முறையில் செய்தல்.
கூந்தல் அலங்காரம் – 20 இற்கும் மேற்பட்ட கொண்டைகள் (Hair Styles) போடுதல்.
FABRIC PAINTING – SAREE PAINTING, கைக்குட்டை, தலையணை உறைகளில் வர்ணந்தீட்டல். EMBOSS PAINTING, POT PAINTING, மண் PAINTING.
உணவுகள் தயாரித்தல் – மேலைத்தேய, கீழைத்தேய மற்றும் சீன உணவுகள் தயாரித்தல்.
கைவேலை – கடதாசி அலங்காரம், கழிவுத்துணி வேலை, கிறிஸ்ரல் வேலை, முத்துமாலை கோர்த்தல், றிபன் வேலை.

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

இத்துடன் அடிப்படை FACIAL அழகுக் கலையும், மணப்பெண் அலங்காரமும், வித்தியாசமான முறைகளில் சேலை அணியும் விதமும், 2 நாள் பயிற்சி வகுப்புக்களாக நடைபெறும்.

6 மாத கால தையல் பயிற்சி, பூவேலை வகுப்புக்கள்

தையல் பயிற்சி – குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள் தைத்தல்.
பூவேலை – கடதாசியினாலும், துணிகளினாலும் 20 வகையான மலர்கள் மற்றும் BOUQUET செய்தல்.

சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 25.09.2004
கிழமை நாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 27.09.2004

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப. 2 மணிவரை அறிந்துகொள்ளலாம்.
– பதிவாளர்

(C/540)



YOGI HOME SCIENCE ACADEMY

EXHIBITION

கேக் அலங்கார கண்காட்சி
CAKE AND SUGAR CRAFT

யாழ். பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் ஆதரவில் எமது அக்கடமி மாணவிகள் வழங்கும்

கேக் மாச்சீனி மலர் அலங்காரக் கண்காட்சி
இன்று முதல் (24.09.2004) 28.09.2004 வரை நடைபெறவுள்ளது

இக் கண்காட்சியை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. E.சரவணபவன் அவர்கள் ஆரம்பித்து வைப்பார்.

இடம் : 75, அம்மன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

காலம் நேரம் – 24 ஆம் திகதி காலை 11 மணிமுதல் இரவு 7 மணிவரை. 25 - 28ம் திகதிவரை காலை 9 மணியிலிருந்து இரவு 7 மணிவரை.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

T.P -222 2796
நிர்வாக இயக்குநர்

(8830)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.